LICENCE No. TN/MS (N) / WPP-100
www.padippakam.com


# ஈழ சுதந்திரன்
ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
உ0உஅ
சித்திரை-வைகாசி

புத்தகம்: 10 இதழ்: 6

மே-1997


∴ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு-நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு!

∴ நன்றிது தேர்ந்திடல் வேண்டும்-இந்த ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்?

∴ கெடுதலை உட்பகை நீங்கினால் ஈழ விடுதலை விரைவில் மலர்ந்திடும்!

## தந்தை செல்வா நூற்றாண்டிலாவது

# தமிழர் கைகள் இணையுமா

ஈழத்துக் காந்தி தமிழீழத் தந்தை சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழாவை உலகத் தமிழர்கள் அனைவரும் உற்சாகமாகக் கொண்டாடி வருகிறார்கள். ஈழத்தில் என்றுமில்லாத ஒரு ஒற்றுமையுணர்வு தந்தை செல்வா நூற்றாண்டு விழாவையொட்டி எல்லாத் தரப்புத் தமிழ் மக்களிடமும் ஏற்பட்டுள்ளது. இவ்விழாவை எடுப்பதில் தமிழ் இயக்கங்களுக்கிடையில் ஒரு போட்டியே ஏற்பட்டுள்ளது. இப்போட்டி ஒருவரையொருவர் தீர்த்துக் கட்டும் உட்பகையிலும்,பழிவாங்கலிலும் செல்லாமல் தந்தை செல்வா காலத்து ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே உலகத் தமிழர்களின் எதிர் பார்ப்பு ஆகும்.



தந்தை செல்வா இலங்கைத் தமிழர்களின் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பிய ஒரு தீர்க்கதரிசி ஆவார். அவர் பொதுவாழ்வில் பிரவேசிக்கும் வரை சாதி, மத, பிரதேச உணர்வுகளே இலங்கைத் தமிழர்பால் மிகுந்திருந்தன.

இந்திய வம்சாவளி (மலையக) தமிழர்கள் தங்களை இந்தியர்களாகவே கூறிக் கொண்டிருந்தனர். அதன் காரணமாக அவர்கள் கட்சி கூட 'இலங்கை இந்தியன் காங்கிரஸ்' என்றே விளங்கியது.

அதைப் போலவே யாழ்ப்பாணத் தமிழர்களும் 'தமிழ்க் காங்கிரஸ்' என்ற பெயரால், தமது தனி நலன்களையே பெரிதாகக் கருதினர்.

### கொழும்புத் தமிழர்

இதனால் மட்டக்களப்புத் தமிழரும், வன்னித் தமிழரும், திருகோணமலைத் தமிழரும் தங்கள் தங்கள் பிரதேச வாதத்தை முன்வைத்து தனிச்சால் ஓட்டுவதிலேயே குறியாக இருந்தனர்.

இந்த எல்லாப்பகுதிகளிலுமிருந்து கொழும்பில் சென்று தங்கி, அங்கேயே நிலைத்து விட்டவர்களோ, கொழும்புத் தமிழர் என்ற பெயரால் மற்றவர்களைப் பார்க்கிலும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டனர்.

இஸ்லாமியத் தமிழர்களோ, தமிழர் பிரச்சினை என்றாலே சைவர் பிரச்சினை, தங்களுக்குச் சம்பந்தமில்லாதது என்பது போலக் காட்டிக் கொண்டு, அவர்கள் ஒரு தடத்தில் சென்று கொண்டிருந்தனர்.

### சிங்களர் ஒற்றுமையுணர்வு

சைவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மத்தியிலே கூட படிப்பு, உத்தியோகம் ஆகியவற்றில் எழுந்த போட்டி காரணமாக புரிந்துணர்வு இருக்கவில்லை.

இவை போதாதென்று சாதிவாரியான சிந்தனைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றால் தமிழ் பேசும் மக்கள். இலங்கையின் எதிர்காலத்தில் தங்களின் ஒட்டுமொத்தப் பாத்திரம் என்ன? உரிமைப் பங்கு என்ன? என்பதைப் பற்றியெல்லாமல் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தனர்.

ஆனால், சிங்கள இனம் தனக்குள் இருந்த சாதி, மத, பிரதேச வேறுபாடுகளையெல்லாம் உதறிக் களைந்து விட்டு ஒரே தேசிய இனமாக எழுந்து நின்றது.

(12-ம் பக்கம் பார்க்க)

## இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று அழுத்தம்திருத்தமாக கூறியவர் தந்தை செல்வா!

### முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் புகழாரம்

"தமிழ் மக்கள் மத்தியில் இருந்த பிளவுகளையெல்லாம் நீக்கி ஒன்றுபடுத்தி, தமிழ்பேசும் முஸ்லிம் மக்களையும் ஒன்றிணைத்து அரசியல் வரலாற்றில் தலைசிறந்த தானைத் தளபதியாக தந்தை செல்வா விளங்கினார்" இவ்வாறு தந்தை செல்வா நூற்றாண்டு தொடக்கவிழா அண்மையில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றபோது அவ்விழாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் பாராளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி ரவூப்ஹக்கீம் எம்.பி. ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். அவர் பேசியதாவது:

"தந்தை செல்வாவும் முஸ்லிம்களும்" என்ற அணுகுமுறையிலே நான் என்னுடைய சொற்பொழிவை நிகழ்த்தவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். நான் தந்தை செல்வாவின் தலைமுறையைச் சேர்ந்தவனல்லன். ஏற்கனவே அண்ணன் சிவா அவர்கள் மேடையில் இருப்பவர்களை அறிமுகப்படுத்துகின்ற பொழுது, "மேடையிலேயிருக்கின்ற அனைவரும் தந்தை செல்வாவுடன நெருங்கிப் பழகியவர்கள்" என்று சொன்னார்கள். நான் அதற்கு விதி விலக்கானவன். நான் அவருடைய தலைமுறையைச் சேர்ந்தவனுமல்ல.

என்றாலும் இந்த நாட்டில் இருக்கும் சிறுபான்மை இனங்களின் தானைத்தளபதியாக நாங்கள் எல்லோரும் அடையாளம் காணும் தந்தை செல்வாவைப்பற்றிப் பேசமுடியாதென்று சொல்லும் எந்த முஸ்லிமும் இந்த நாட்டிலே இருக்க முடியாதென்று நான் நினைக்கிறேன். அவருடைய நூற்றாண்டு விழாவின் இந்த ஆரம்ப நிகழ்ச்சியிலே எனக்குச் சொற்பொழிவாற்றக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை என் வாழ்க்கையிலே ஒரு பொன்னான நாளாகவும் நான் கருதுகின்றேன்.

(2-ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர் குஜ்ராலுக்கு ஈழமக்களின் நல்வாழ்த்துக்கள்!

இந்தியாவின் 12-வது பிரதம மந்திரியாக மாண்புமிகு இந்தர்குமார் குஜ்ரால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கல்வியும் அனுபவமும் கூடிய மூத்த தலைவரான அவர் இந்திய அரசில் ஏற்கனவே பல்வேறு பொறுப்புகளை சிறப்பாக வகித்த பாங்குடையவர். அதிலும் அயலுறவு அமைச்சராக இருமுறை இருந்து கடல்கடந்த இந்திய வமசாவளியினரின் சிக்கல்களையும் அவற்றைத் தீர்க்கவேண்டிய வழிமுறைகளையும் முற்றுமுழுதாக அறிந்தவர்.

அந்த வகையில் இலங்கை இனப்பிரச்சினையின் ஆழ அகலங்களையும், தமிழ்மக்களின்பால், இந்தியாவுக்குள்ள பொறுப்புகளையும் நன்கு உணர்ந்த அவர், தாம் தலைமையமைச்சராகவே ஆகியிருக்கும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிரந்தரமான தீர்வைத் தேடித் தருவார் என்று நம்புகிறோம்.

அந்த நம்பிக்கையுடனும், இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிமக்களின் குறைகள் அகற்றப்படும் என்ற எதிர்பார்ப்புடனும் மாண்புமிகு குஜ்ரால் அவர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் சார்பிலும், இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ஈழ அகதிகள் சார்பிலும், 'ஈழ்சுதந்திரன்' உளமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்திய-ஈழ நட்புறவோங்குக! இந்தியத் தாயின் நற்புகழ்வாழ்க!

## ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

www.padippakam.com

''நல்லொழுக்கம் இல்லார் இடம் சேர்ந்த நல்லோர்க்கு
நல்லொழுக்கம் இல்லாச் சொல் நாணுமே-
கொல்லும்விடப்
பாம்பென உன்னாரோ பழுதையே ஆனாலும்
தூம்பமரும் புற்றடுத்தால் சொல்'' -நீதிவெண்பா

''உள்தொளை பொருந்திய புற்றுக்குப் பக்கத்தில் கிடப்பது பழுதைக் கயிறேயானாலும், இரவில் அதனைக் காண்பவர் கொல்லும் நஞ்சைக் கொண்ட பாம்பு என அதனைச் சொல்ல மாட்டார்களோ! அது போல, நல்லொழுக்கம் இல்லாத தீயவரைச் சேர்ந்த நல்லவர்களுக்கும் ஒழுக்கம் இல்லாத பழிச்சொல்லே வந்து சேரும்.

(தூம்பு-உள்தொளை, புற்று-பாம்பு வாழும் வளை)

# தெளிவு

## சிங்களக் கட்சிகளிடையே உருவாகும் ஒற்றுமை

பிரித்தானியரின் முயற்சி காரணமாக தமிழ் மக்களின் சிக்கலுக்குத் தீர்வு ஏற்படுகிறதோ இல்லையோ, சிங்களக் கட்சிகளுக்கிடையே தமிழர் விடயத்தில் ஒற்றுமை உருவாகும் நிலை தோன்றியுள்ளது.

சிங்களவர் மத்தியில் எத்தனையோ கட்சிகள் இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தான் பிரதான அரசியல் கட்சிகளாகும்.

இவை தேசியக் கட்சிகள் என்று சொல்லிக் கொண்டாலும், அடிப்படையில் புடம் போட்டெடுக்கப்பட்ட சிங்கள இனவாதக் கட்சிகளே.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களில் ஒரு பிரிவான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை-வாக்குரிமைகளைப் பறித்து, அவர்களை நாடற்றோராய் ஆக்கிய நாசத்தை ஐக்கிய தேசியக் கட்சி செய்ததென்றால், தோட்டக்காணிகளை நாட்டுடைமையாக்குகிறோம் என்ற பெயரால் அவர்தம் வாழ்விடங்களையும், தொழில் வாய்ப்பையும் பறித்த அநியாயத்தைப் புரிந்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சியாகும்.

இன்னொரு தமிழ் பேசும் பிரிவினராக இஸ்லாமியத் தமிழ் மக்களை, அவர்களை வேறு தேசிய இனம் என்று சொல்லி தமிழினத்தின் தேசிய பலத்தை-ஒற்றுமையைச் சிதைத்த காரியத்தை இரண்டு கட்சிகளுமே போட்டி போட்டுக்கொண்டு செய்தன

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலம் தமிழர் தாயகத்தை விழுங்கியதில் இரண்டு கட்சிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல.

அதைப் போலவே தமிழினத் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை, அவற்றில் கைச்சாத்திடப்பட்டமை உலர்வதற்கு முன்பாகவே கிழித்தெறிந்த கேவலத்திலும் இவ்விரு கட்சிகளுக்கும் சமபங்கு உண்டு. (உதாரணம்: செல்வா-பண்டா ஒப்பந்தம், டட்லி-செல்வா உடன்பாடு.)

இனக் கலவரங்களைத் தூண்டி விட்டு தமிழ் மக்களுக்கெதிரான இனப்படுகொலைகள் நடைபெற ஊக்குவித்ததிலும் இவ்விரு கட்சிகளுக்கும் பங்கிருக்கிறது.

1956. 1958, 1961, 1964 தமிழினப் படுகொலைகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் நடந்தனவென்றால், 1977, 1981, 1983 ஆண்டுகளில் முன்னவை என்ன பிரமாதம்? என்று மூக்கில் விரலை வைக்கும் வண்ணம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் அகோர தாண்டவம் ஆடின.

ஏனைய சிங்களக் கட்சிகள் இடைக்கிடை தமிழ் மக்களுக்காகக் கண்ணைக் கசக்கிக் கொண்டனவென்றாலும் ஒன்றில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பக்கமோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கமோதான் நின்றன; நிற்கின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இருந்தாலும், இவ்விரு கட்சிகளும் இனப் பிரச்சினை தீர்க்கப்படாததற்கு ஒன்று மற்றொன்றின் மீது பழி போடுவது வாடிக்கையாகும்.

இந்த வாடிக்கைக்கு ஒரு வழி செய்வதில் தான் இப்போது பிரித்தானியா முன்முயற்சி எடுத்திருக்கிறது. அதாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இவ்விரு கட்சிகளையும் ஒன்றிணைப்பதில் அது கணிசமாக வெற்றி பெற்றிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

ஆனால், அந்த ஒன்றிணைவு தமிழினத்திற்கு மோசம் செய்வதில் ஒருவரையொருவர் விட்டுக் கொடாமை என்றிருக்குமானால். அதனாலே தமிழினத்திற்கு இம்மியளவு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

அவர்கள் ஒருவரையொருவர் பழி தூற்றிக் கொண்டிருக்கும் போதே தமிழர்களுக்கு எதுவும் விட்டுக் கொடுக்கப்படவில்லை என்கிறபோது, அவர்கள் ஒன்றுபட்டால் என்ன நேரும் என்பதை எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்?

மேலும், இந்த மத்தியஸ்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற பிரித்தானியாவின் நிலைப்பாடும் நம்பிக்கைக்குரியதல்ல.

இலங்கை அவர்களுடைய காலனியாக இருந்த போது, அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதாகச் சொல்லி அவர்கள் அமைத்த டொனமூர் ஆணைக் குழுவானாலும், சோல்பரி ஆணைக்குழுவானாலும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை அவர்கள் சரிவரக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

1948ல் இலங்கைக்குச் சுதந்திரமளிக்க அவர்கள் முடிவு செய்தபோது தமிழ மக்களின் உரிமைகளுக்குத் தகுந்த சட்டப் பாதுகாப்புச் செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் விடுத்த இறுதிக் கோரிக்கையைக் கூட அவர்கள் அலட்சியப் படுத்தி விட்டனர். அதன் விளைவாகத்தான் இன்றைக்கு அங்கே சிங்களப்பேரினவாதம் கொடி கட்டிப்பறக்கவும, தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவும் வழியேற்பட்டு விட்டது.

அப்படி ''இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான்'' என்ற சொலவிடைக்கேற்ப, சுதந்திரத்திற்கு முன்பும் சுதந்திரம் கொடுத்தும் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதகம் புரிந்த பிரித்தானியா, இப்போது ஈடுபட்டுள்ள மத்தியஸ்தத்தால் மட்டும் சாதகம் செய்து விடும் என்று நம்புவதற்கில்லை.

சொல்லப் போனால் 1987ல் இந்தியா தலையிட்டு ''வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம்'' என்று சிறீலங்காவை ஒப்புக் கொள்ளும்படி வைத்ததே அதைச் சீர்குலைப்பதாகக் கூட இருக்கலாம்.

எனவே எந்த மத்தியஸ்தமும், எத்தகைய தீர்வுத் திட்டமும் 1987ல் நிலைநாட்டப்பட்ட ''தமிழர் தாயகம்'' என்பதை ஒப்புக்கொண்டு மேலேறிச் செல்வதாக இருக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்க வேண்டும்.

மாறாக இலங்கைத் தமிழர்கள் பால் இந்தியாவிற்கு இருக்கின்ற கடப்பாட்டை (பொறுப்பை) நீக்கி, புதிய மத்தியஸ்தம் என்ற பெயரில் ஏற்கனவே எட்டப்பட்ட முடிவுகளையும் வெட்டி முறித்து விடுவதாக இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பிரித்தானியாவைப் பொறுத்தவரை நமக்கிருக்கின்ற கசப்பான முன்னனுபவத்தை இலங்கைத் தமிழர்கள் யாரும் என்றும் மறக்கக் கூடாது.

## யாழ். பல்கலையில் 'ராகிங்' செய்த மாணவர்க்குஏற்பட்ட புது அபனுவம்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்காக ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பொதுமகன் ஒருவர் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலரை மிகவும் சினம் கொண்டு கத்தியோடு துரத்திய காட்சியைக் காண முடிந்தது.

பல்கலைக்கழக புகுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் ''ராகிங்'' என்ற போர்வையில் துன்புறுத்துகின்ற காட்சியை தினமும் இக்கல்லூரி முன் வாசலில் காணலாம்.

### துரத்திப் பிடித்தனர்

இங்கு ஆண் மாணவர்கள் பலர் சேர்ந்து ஒரு பெண்ணை அல்லது இருவரை சூழநின்று கெட்ட வார்த்தைகளை உபயோகித்து திட்டுவதையும், காடைத்தனமாக இரட்டை அர்த்தத்தில் பேசுவதையும் அடிக்கடி அவதானிக்கலாம். இவ்வாறு தொடர்ச்சியாக பெண் பிள்ளைகளைத் துன்புறுத்துவதை அவதானித்த பொதுமக்களே பொறுக்காது கத்தியுடன் மாணவர்களைத் துரத்த சூழவுள்ள பொதுமக்களும் இணைந்து அவர்களைத் துரத்தினர்.

பல்கலைக் கழகத்திற்குள் உங்களைத் துன்புறுத்துவோம். அதனால் நாங்கள் சொல்வதை கேளுங்கள். செய்யுங்கள் என்று பயமுறுத்துவதும் அறைக்கு கூட்டிச்சென்று ஆடைகள் களையப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப் படுவதும் நடைபெறுகிறது. கடுமையான உடல் பயிற்சிகள் கொடுக்கப்படுதல், சுருட்டுக் குடிக்கச் செய்தல், சகலரக மது வகைகளும் குடிக்க வைத்தல், போன்ற வக்கிர வதைகளை செய்வதை பல்கலைக்கழக சூழல் பகுதிகளில் அவதானிக்க முடியும்.

### புதியதொருநிலை

ராகிங் என்று அழைக்கப்படும் இந்த வன்முறை பகிடிவதையை மறுப்பவர்கள் கடுமையாக வளாக சூழலில் நிந்திக்கப்படுவதோடுசிரேஷ்ட மாணவர்களின் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைக்கு ஆளாகவும் வேண்டியுள்ளது.

நல்லதொரு எதிர்பார்ப்பை வளாக மாணவரிடம் எதிர்பார்க்கும் சமூகம் இவர்களின் கீழ்த்தரமான செய்கைகளால் மாற்றப்பட்டு எதிர்த்த எழுச்சி பல்கலைக்கழக சமூகத்தை புதியதொரு நிலைக்கு மாற்ற முனைகிறது என்பதை உணர முடிகிறது.

ராகிங்கில் ஈடுபடுவோருக்கு ஆகக் குறைந்த தண்டனை ஒரு வருடம் அவர்களை இடைநிறுத்தி வைத்தல். இது கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் இந்த ''ராக்கிங்'' சேட்டைகள் குறைவடையும்.

### நடவடிக்கை இன்மை

பாதிப்புற்ற மாணவர்கள் நேரடியாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்கும் வசதி உள்ளதால் ஒவ்வொரு மாணவர்களும் பெற்றோர்களும் விழிப்பாக இருந்து செயற்பட்டால் பல பிரச்சினைகள் உருவாவதை தவிர்த்து, நல்லதொரு தலைமுறை உருவாக வழி சமைக்கலாம்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில்''ராக்கிங்''க்கு இசைய மறுத்த சில மாணவர்கள் வளாக நிகழ்ச்சிகளில் பங்கு பற்றவோ, பார்வையிடவோ செல்வதை தடுப்பதில் சிரேஷ்டமாணவர்கள் சிலர் நின்றதனை அறியக் கூடியதாய் இருந்தது.

இது ஒரு மனித உரிமை மீறலாகவும், பல்கலைக்கழக விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருந்தது. இது தொடர்பாக நிர்வாகத்தினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நிர்வாகத்தினரதும், மானிய ஆணைக் குழுவினதும் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த அநாகரிக செய்கைகளுக்கு எதிராக நிற்கின்ற மாணவர்களுக்கு நீதியான முறையில ஆதரவு வழங்கப்படுதல் வேண்டும்.

—ஓரன்பர்

### தடைப்பட நியாயமில்லை

தலைவர்கள் என்போர் ஒரு கட்டத்தில் கொள்கையிலிருந்து மாறிப்போகலாம், அல்லது அரசுடன்சேரலாம், நோய் நொடியினால் மாண்டு மறைந்தும்போகலாம்; ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டம் இதனால்எல்லாம் தடைப்பட வேண்டிய நியாயம் கிடையாது.

-தந்தை செல்வா

படிப்பகம்

## ஒருகுறளை உணர்வோம்

### 41. புலித்தோல் போர்த்திய பசுவும் போலித்தோற்றம் மேற்கொண்ட மனிதனும்

-: அருநேசு :-

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்துமேய்ந் தற்று"

திருக்குறள்: 273

பரிமேலழகர்: வலிஇல் நிலைமையான் வல் உருவம்- மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையார் வேடத்தைக் கொண்டு தான் அதன் வழிப்படுதல்; பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று பசு காவலர் கடியாமல் புலியின் தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தற் போலும் என்றவாறு,

இல்பொருளுவமை 'வலியினிலைமையான்' என்ற அடையானும், மேய்ந்தற்று என்னுந் தொழிலுவமையாலும் வல்லுருவத்தோடு மனவழிப்படுதல் என்பது பெற்றாம் காவல் கடியாமை புலி புல் தின்னாது என்பதனானும். அச்சத்தானும் ஆம். ஆகவே வல்லுருவம் கோடற்குப் பயன் காரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாளையும் துறந்து, வலியும் இன்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங்கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது, தன் மனம் ஓடிய வழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறாதல், பெற்றம் தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்த்தாற் போலும் என்ற உவமையான் அறிக.

மணக்குடவர்: வலியில்லாத நிலைமையை உடையவன் வலிதாகிய தவ உருவ்ம் கோடல், பெற்றமானது பிறர் பயப்படும்படி புலியினது தோலைப் போர்த்துப் பைங்கூழ் மேய்ந்த தன்மைத்து என்றவாறு.

பரிதியார்: தவத்தில் உறுதியில்லாதான் வலுவாகக் கொண்ட வேஷம்; ரிஷபம் மேய வேண்டிப் புலித்தோல் போர்த்துப் புறப்பட்டதற்குச் சரி என்றவாறு.

காளிங்கர்: இவ்வுலகத்துத் தான் கொண்டதோர் தங்குறை முடிப்பதொரு கோட்பாடுவலி தன்நெஞ்சத்தில்லாத தன்மையான் அவன் மாட்டுத் தவநெறி வலிபெற்று நின்றது போலத் தோன்றுகின்ற கோலமானது யாதினை ஒக்குமோ எனில், புலி போல்வதோர் மனத்திட்பம் இல்லாத பசுவானது திட்பமுள்ளது போலப் புலியினது தோலினைப் போர்த்து நடித்தும், பண்டைப் புலியினையே பின்னும் மேய்ந்த அத்தன்மைத்து என்றவாறு.

டாக்டர் மு.வ.: மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொண்ட வலிய தவக்கோலம், பசு புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றது.

'கூடா ஒழுக்கம்' என்கிற அதிகாரத்தில் இக்குறட்பா வைக்கப்பட்டிருப்பதால் பரிமேலழகர் தொடங்கி மு.வ.வரை அதற்கேற்ப இதற்குப் பொருள் கூறியுள்ளனர்.

ஆனால், நாம் ஏற்கனவே கூறியதைப்போல பால், இயல், அதிகாரம் என்பவையெல்லாம் திருக்குறளுக்குப் பிற்காலத்தில் வகுத்துச் சேர்க்கப்பட்டதன்றி, வள்ளுவரே வகுத்தமைத்தார் என்று சொல்வதற்கில்லை. அதற்கு இக்குறட்பாவே சான்றாகும்.

இங்கே பசு புலித்தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்ந்ததாகிய உவமை, வலிமை இல்லாத நிலையில் உள்ளவன் தோரணையில் வலிமையுள்ளவன் போல் காட்டிக் கொள்ளும் பொய்மையை விளக்குவதற்காகவே திருவள்ளுவரால் கையாளப்பட்டிருக்கிறது.

ஏனென்றால், புலி விலங்குகளையன்றிப் பயிரைமேயாது அதனால் புலித்தோல் போர்த்த பசுவை புலி என்று நினைத்து முதலில் மருளும் தோட்டக்காரன் அது பயிரை மேய்வதைக் கவனித்ததும் துணிவு பெற்று, அது உண்மைப் புலியல்ல என்பதைப் புரிந்து கொண்டு, அதனை அடித்துத் துரத்தி விடுவான் அதுபோல உண்மையான வலிமையின்றி வலியவன் போல் போலித் தோற்றம் காட்டுபவன், அல்லது உரிய தகுதியின்றி, வலிய செயலைச் செய்ய முயல்பவன் அடித்து விரட்டப்படுவான்; அவமானப்படுத்தப்படுவான் என்பதையே இக்குறட்பா மூலம் வள்ளுவர் விளங்க வைத்துள்ளார்.

மேலும், பசு புலித் தோலைத் தானே எடுத்துப் போர்த்திக் கொள்ளும் திறமை கொண்டதுமன்று. அயலான்பயிரை அழிக்க எண்ணும் ஒருவனே பசுவுக்குப் புலித் தோலைப் போர்த்து பயிரை மேய விரட்டியிருப்பான்.

அப்படியானால் எப்பார் கைப்பிள்ளையாக, யாரோ அவன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக இவன், இவனுக்குத் தகுதியில்லாத வலிய வேடத்தைப் போட்டுக் கொண்டு செயல்பட முனைந்தால் இவனின் மெலிய நடத்தைகள் இவனைக் காட்டிக் கொடுத்து, அவமானத்தை ஏற்படுத்தி விடும் தானே!

ஆக, "வலியில் நிலைமையான் வல்லுருவம்" பூணுதல் பிறர் முறுக்கேற்றுகிறார்கள் என்பதற்காகத் தனக்குத்தகுதியில்லாதவற்றை, தகுதியிருப்பதாக அவர்கள் ஏற்றும் போலிப் புனைவை நம்பி மேற்கொள்ளுதல் இன்னலுக்கும் இழிப்புக்குமே வழி வகுக்கும் என்பதைத்தான் இக்குறட்பா மூலம் வள்ளுவர் தெளிய வைத்துள்ளார் என்பதே பொருத்துவதாகும்.

## தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனத்தை உணராததாலேயே இரத்த ஆறு ஓடுகிறது

### நூற்றாண்டு விழா ஆரம்ப வைபவத்தில் ஜோசப் எம்.பி.

தந்தை செல்வா தமிழ் பேசும் மக்களுக்கு சொந்தமானவர். தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை அஹிம்சை வழியில் பெறப் போராடிய தீர்க்க தரிசனம் மிக்க தலைவராக வாழ்ந்தார். தந்தை செல்வாவின் நல்லெண்ணத்தை பெரும்பான்மையினத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளாததாலேயே இன்று எமது நாடு இரத்த ஆறு ஓடும் யுத்த களமாக மாறியுள்ளது" என மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் கூறினார்.

தந்தை செல்வா நூற்றாண்டு விழா ஆரம்பத்தை முன்னிட்டு அமிர்தகழி ஸ்ரீ மாமங்கேஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்ற விசேட பூஜை வழிபாட்டைத் தொடர்ந்து இடம் பெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆலயக் கண்ணக்கரும் வாழைச்சேனை கடதாசி முகாமையாளருமான கே. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார்.

### சமஷ்டிக் கொள்கை

ஜோசப் எம்.பி. தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்திய வம்சாவளி மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட மசோதாவை எதிர்த்து வாக்களித்து அதன் பின்னர் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்து இணைப்பாட்சி மூலம் தமிழர்களின் இழந்த உரிமைகளை மீட்டெடுத்து தலைநிமிர்ந்து வாழ முடியுமென நம்பினார்.

பேச்சுவார்த்தை, சத்தியாக்கிரகம் போன்ற சாத்விக வழிகளில் முனைப்புடன் போராடினார். ஆனால்பெரும்பான்மை இனத்தலைவர்கள் எமது இலட்சியப் போராட்டத்தை உதாசீனம் செய்ததுடன் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர்.

இதன் காரணமாக சமஷ்டி கோரிக்கையில் நம்பிக்கை இழந்த தந்தை செல்வா, 1971ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் பிரிவினைக் கொள்கையை முன் வைத்தார்.

சமஷ்டி மூலம் தமிழர் அபிலாஷைகளை வெல்ல முடியாது. எனது அரசியல் அனுபவங்களின் மூலம் பிரிந்து செல்வதன் மூலமே இழந்த உரிமைகளை மீட்கலாம் தனி அரசு அமைப்பது இலகுவானதல்ல. பாரதூரமான கஷ்டங்களை எதிர்நோக்க வேணடி வரும். பேரினவாத ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் இல்லையேல் அழிந்து போவோம்.

### அகிம்சை வழி

இதனால் எப்படி போராடியாவது தனிநாடு பெறுவோம். எமது போராட்டம் வன்முறையிலல்ல. அஹிம்சை வழியிலேயே தொடரும்" என்று பாரீளுமன்றத்தில் கூறினார்.

முஸ்லிம்களை அரவணைத்து போராடியதுடன் பிராந்திய ரீதியாகப் பிளவுபட்டிருந்த தமிழ் சமூகத்தை ஒன்றுபடுத்தி வடக்கு-கிழக்கு இணைப்புக்கு வித்திட்டவர்.

தந்தை செல்வாவின் நேர்மையை, தீர்க்கதரிசனத்தை இப்போது பெரும்பான்மை இனத் தலைவர்கள் உணர்ந்து வருகிறார்கள்.

வாழைச்சேனை காகித ஆலை முன்னாள் முகாமையாளர் கணபதிப்பிள்ளை பேசுகையில்:-

"தந்தை செல்வாவின் வாழ்நாளில்" தமிழர் பிரச்சினை தீராவிட்டாலும் அவரின் ஆத்மா என்றும் எம்மோடு இருந்து எமது விடிவுக்காகப் போராடும் தியாகம், நேர்மை, தீர்க்கதரிசனம் நிறைந்த தலைவராக வாழ்ந்த தமிழ் தலைவர்களில் தந்தை செல்வா நிகரற்றவர்" என்றார்.

மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதம குரு பூரணானந்த குருக்கள் உதவியாளர் சந்திரானந்த குருக்கள் ஆகியோர் விசேட பூஜையை நடத்தினார்கள்.

தாண்டவன்வெளி, வியாகுலமாதா தேவாலயத்திலும் விசேட ஆராதனைகள் இடம் பெற்றன அருட்தந்தை யோசப்மேரி அடிகளால் நடத்தி வைத்தார்.

தந்தை செல்வா நினைவு தின வைபவங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட கிளைச் செயலாளர் அல்போன்ஸ்மேரி, திருமதிசுகுணம் ஜோசப் பராராஜசிங்கம், மட்டக்கடப்பு மக்கள் மயப்படுத்தப்பட்ட டிப்போ முகாமையாளர் எஸ். சந்திரசேகரம் மற்றும் கூட்டணி பிரமுகர்கள் விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டார்கள்.

## மன்னார் தீவில் பதற்றம் தணியவில்லை

பேசாலையில் அண்மையில் இராணுவம் மற்றும் பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களைத் தொடர்ந்து மன்னார் நகரில் எந்நேரமும் பதற்றம் நிலவி வருகிறது.

இராணுவத்தினதும்பொலீஸாரினதும் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க புலிகளும் மன்னார் தீவுக்குள் அடிக்கடி ஊடுருவி நடமாடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வங்காலை, விடத்தல்தீவு அடம்பன் போன்ற பெருநிலப் பரப்பு பிரதேசத்திலிருந்து அச்சத்துடனேயே மக்கள் மன்னார் தீவுக்கு வந்து செல்கின்றனர். மன்னார் தீவில் மீண்டும் எந்நேரமும் மோதல் நிகழலாம் என்ற அச்சத்திலேயே மக்கள் உள்ளனர்.

இதே வேளை மன்னார் தீவில் உள்ள பேசாலையில் கடைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. கடைகளில் இருந்த பொருள்களை வர்த்தகர்கள் தங்களதுவீடுகளுக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

### நம்பிக்கைக்கு வெற்றி உறுதி!

"பல்வினத்தால் பல தேசங்கள் அடிமை நிலைக்கு உதைத்துத் தள்ளப்பட்டன. இரட்சிப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் போராடிய மக்கள் காலகதியில் அடிமைத் தளையை அறுத்து சுயாதீனத்தை அடைந்தனர். நாமும் அவ்வாறு போராடி தமிழரசை நிறுவுவோம்"

—தந்தை செல்வா

(2-2-1959ல் தமிழரசு வாலிப முன்னணி 7வது மாநாட்டில் ஆற்றிய உரை)

www.padippakam.com

### எத்தனை இடர் வந்தாலும் இயக்கம் நடக்கட்டும்

அடிமைத்தனத்தை எதிர்த்துத் தமிழர்கள் புரட்சியில் இறங்குவார்கள். இழந்த சுதந்திரத் தமிழீழ நாட்டை மறுபடியும் மீட்டே தீருவோம். தமிழ்மக்களின் குரலாக நின்று இச்சபையில் கூறுகின்றேன் எத்தனை இடர்கள் வந்தாலும் தனித் தமிழ்நாட்டைஅமைக்க இயக்கங்களை நடத்தியே தீருவோம்.

—தந்தை செல்வா

(20-11-1975ல் சிறீலங்கா நாடாளுமன்றத்தில்)

## சமுகரங்கபுரம் முகாமில் சிவராத்திரி விழா

கடந்த 7.3.97 அன்று சமுகரெங்கபுரம் முகாமில் தலைவர் திரு. ராமஜெயம் தலைமையில் நிர்வாகக்குழு பொதுமக்கள் ஒத்துழைப்புடன் சிவராத்திரி விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரிய மாணவர்களும் பெரிதும் ஒத்துழைப்பு நல்கினார்கள். ராமஜெயம், ராஜபாலன், பத்மாவதி, தில்லை ஜோதி, திலகவதி, ஜெயலட்சுமி ஆகியோர் நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கினார்கள்.

நான்கு கால பூஜையும், இசை நடனம், கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு என்பன நடைபெற்றன. மறுநாள் காலை விசேட பூஜையும் நடைபெற்றது.

தகவல்: மு. ராமஜெயம் (நிர்வாகக்குழுத்தலைவர்.)

## தங்கத்துரை இல்லத்திரும்ணம்

திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு அ. தங்கத்துரை அவர்களின் மகன் திருநிறைச்செல்வன் மதனதேவா அவர்களுக்கும், திரு-திருமதி அம்சதேவா அவர்களின் மகள் திருநிறைச் செல்வி புஷ்பாஞ்சலி அவர்களுக்கும் 12-4-97 அன்று, சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள தாசப்பிரகாஷ் திருமணமண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் திரு. சா. செ. சந்திரகாசன். முன்னாள் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட ஏராளமான ஈழப் பிரமுகர்களும். தமிழகச் சட்டப்பேரவை அ.தி.மு.க கட்சித் தலைவர் எஸ். திருநாவுக்கரசு உட்படத் தமிழகப் பிரமுகர்களும் திரளாகக் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். வாழ்க மணமக்கள்!

# ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் - உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் தொடர்பான அறிவித்தல்

அன்புடையீர்,

தமிழ் நாட்டில் தங்கி உள்ள இலங்கைத் அகதி மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் கீழே தரப்படுகின்றன.

இலங்கை அகதி மாணவர்கள் பல துறைகளில் உயர் கல்வி மற்றும் முறை சார்ந்த தொழிற் கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

### (அ) பத்தாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான வாய்ப்புகள்

பத்தாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் மறுபடியும் பள்ளியில் சேர்ந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை படிப்பதே நல்லது. இல்லாத பட்சத்தில் அவர்கள் பாலிடெக்னிக்கிலும், அரசு தொழிற் பயிற்சி கூடங்களிலும் (ஐ.டி.ஐ) படிக்க வாய்ப்பு உண்டு. இந்நிறுவனங்களில் இடம் கிடைப்பது நிச்சயமில்லாத காரணத்தைக் கொண்டு பதினோராம் வகுப்பில் படிப்பதற்கு பள்ளியில் சேர்ந்து இந்நிறுவனங்களில் படிக்க விண்ணப்பிப்பது பாதுகாப்பானது. அனுமதி பெற்றால் பள்ளியில் (ரி.சி.) பள்ளி மாற்றுச் சான்றிதழ் பெற்று இந்நிறுவனங்களில் சேரலாம்.

#### 1) பாலிடெக்னிக்-

பாலிடெக்னிக்னிக்கில் படிக்க இலங்கை அகதி மாணவர்களுக்கு (20) இடங்களை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது பாலிடெக்னிக்கில் சேர்ந்து படிக்க விரும்புவோர் பத்தாம் வகுப்புத் தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 35% மதிப்பெண்களும், இவ்விரண்டின் தொகுப்பில் 45% மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். அத்தகுதியைப் பெற்றோர் தொழில் கல்வி இயக்குநரகத்திலிருந்து வெளிவரும் பொது அறிவித்தலில் கொடுக்கப்படும் விதமுறைக்கமைய தொழிற்கல்வி இயக்கத்தில் விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்தபின் சமர்ப்பிக்க வேண்டும்.

#### 2) தொழிற் பயிற்சிக் கூடங்கள் (ஐ டி ஐ)-

ஐ.டி.ஐ.-களில் சேர்ந்து படிக்க விரும்புவோர் அருகிலுள்ள இக்கூடங்களை அணுகி விண்ணப்பம் பெற்றுப் பூர்த்தி செய்தபின் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு - ஐ.டி.ஐ என்ற பெயரில் இரண்டு விதமான பயிற்சி நிலையங்கள் உள்ளன.

முதலாவது - அரச தொழில் பயிற்சிக் கூடங்கள் — இவை அரசினால் நடத்தப்படும் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள். இந்நிறுவனத்தில் சேர்ந்து படிப்போர் பத்தாம் வகுப்புச் சித்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

சான்றிதழ் - தொழிற் சான்றிதழ்

படிப்புக்காலம் — 1) பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மூன்றாண்டு காலம். 2) பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம்.

ஒவ்வொரு அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும் சில இடங்கள் இலங்கை அகதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

#### இரண்டாவது - இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிலையம் -

இந்நிலையங்கள் தனியாரால் நடத்தப்படும் முறையான அங்கீகாரம் பெறாதவை. இவற்றில் படிக்க கல்வித் தகமை இல்லை. இவற்றில் இட ஒதுக்கீடு இல்லை. இலங்கையில் இச்சான்றிதழுக்கு மதிப்புக் குறைவு.

#### 3) தாதியர் பட்டயப் படிப்பு -

பத்தாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களினால் நடத்தப்படும் தாதியர் பட்டப்படிப்பு படிக்கலாம். ஆனால் இந்நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்றவையா என்பதை உறுதி செய்தபின் சேரவும்.

### அ) பன்னிரண்டாம் வகுப்புத்தேர்வில் சித்தி பெற்றோருக்கான வாய்ப்புகள்

பன்னிரண்டாம் வகுப்புத்தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பல வாய்ப்புகள் உள்ளன. அவையாவன - 1) மருத்துவப் பட்டப் படிப்பு 2) பொறியியல் பட்டப் படிப்பு 3) வேளாண்மைப் பட்டப்படிப்பு 4) கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை, இளம் அறிவியல், இளம் வணிகவியல் பட்டப்படிப்பு 5) சட்டப் பட்டப் படிப்பு 6) தாதியர் பட்டப் படிப்பு 7) அஞ்சல் வழிக்கல்வி மூலம் பட்டப் படிப்பு.

இவ்வாய்ப்புகள் இருக்கும் போதிலும் மருத்துவம் பொறியியல் போன்ற தொழிற் சார்ந்த கல்வி கற்பதற்கு போட்டி அதிகமாக இருப்பதால் முதலில் கலை. அறிவியல் கல்லூரியொன்றில் சேர்ந்து பின் முயற்சிகள் செய்வது பாதுகாப்பாக இருக்கும்.

#### 1) மருத்துவம் -

மருத்துவக் கல்லூரிகளில் சேர ஆர்வமிருப்போர் இயற்பியல், வேதியல் மற்றும், உயிரியல் அல்லது (விலங்கியல், தாவரவியல்) ஆகிய பாடங்களை பன்னிரண்டாம் வகுப்பில் படித்து, குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55% மதிப்பெண்களைப் பெறுவதுடன், மொத்தமாக 60% மதிப்பெண்களை மேற்குறிப்பிட்ட பாடங்களிற்கான மதிப்பீட்டின் தொகுப்பில் பெற்றிருக்க வேண்டும். இத்தகுதிகளைப் பெற்றிருப்போர் பத்திரிகைகளில் வெளியாகும் பொது அறிவிப்புக்கமைய மருத்துவ இயக்குநரகத்தில் விண்ணப்பம் பெற்று அதிற்குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப விண்ணப்பம் செய்யலாம்.

#### 2) பொறியியல்:

பொறியியல் கல்லூரிகளில் சேர ஆர்வம் கொண்டவர்கள் இயற்பியல், வேதியல்; கணிதம் ஆகிய பாடங்களைப் பன்னிரண்டாம் வகுப்பில் படித்த குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55% மதிப்பெண்களைப் பெற்று மொத்தமாக 60% மதிப்பெண்களை மேற்குறிப்பிட்ட பாடங்களிற்கான மதிப்பீட்டின் தொகுப்பில் பெற்றிருக்க வேண்டும். இத்தகுதிகளைப்பெற்றிருப்போர் தொழிற் கல்வி இயக்குநரகத்தினால் செய்தித்தாள் மூலம் வெளியிடப்படும் விளம்பரத்தைக் கவனித்து அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்படும்முறையில் தொழிற் கல்வி இயக்குநரகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

#### 3) வேளாண்மை:

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மைப் பட்டப்படிப்பில்சேர்ந்து படிக்கவிரும்புவோர் பன்னிரண்டாம் வகுப்பில் இயற்பியல், வேதியல், உயிரியல் அல்லது (விலங்கியல் தாவரவியல்) ஆகிய பாடங்கள் கற்று ஒவ்வொன்றிலும் குறைந்த 55% மதிப்பெண்களையும், இப்பாடங்களின் மதிப்பெண்களின் தொகுப்பில் 60% மதிப்பெண்களையும் பெற்றிருக்க வேண்டும் இத்துறையில் படிக்கவிரும்புவோர் வேளாண்மைத் துறையினால் செய்தித்தாள்களின் ஊடாக வெளியிடப்படும் விளம்பரத்தில் குறிக்கப்பட்டுள்ள முறைக்கேற்ப தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

#### 4) கலை அறிவியற் கல்லூரிகள்:

கலை அறிவியல் கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்.சி. பி.காம், பி.பி.ஏ. ஆகிய பட்டப்படிப்புகளையும் பட்ட மேற்படிப்புகளையும் படிக்க ஆர்வமுள்ளவர்கள்; அருகிலுள்ள கல்லூரிகளில் அனுமதி பெற மனுச்செய்ய வேண்டும் இலங்கை அகதி மாணவர்களை சேர்ப்பது இந்திய மாணவர்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தாத முறையில் ஒவ்வொரு துறையிலும் மேலதிக ஒதுக்கீடுகளைச் செய்யும்படி கல்விச் செயலர் ஆணை பிறப்பித்துள்ளார்.

#### 5) சட்டப் படிப்பு:

பன்னிரண்டாம் வகுப்புத்தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் ஐந்தாண்டு சட்டப்படிப்பிற்கு சட்டக் கல்வி இயக்குநரகத்திற்கு விண்ணப்பிக்கலாம். தமிழ்நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, மதுரை, கோவை திருநெல்வேலி சட்டக் கல்லூரிகளில் விண்ணப்பம் பெற்று விண்ணப்பிக்கலாம். மேலும் பட்டப்படிப்பினை நிறைவு செய்த மாணவர்கள் மூன்றாண்டு பட்டப்படிப்பிலும் சேர வாய்ப்பு உண்டு.

#### 6) தாதியர் பட்டப்படிப்பு

பன்னிரண்டாம் ஆண்டுத்தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் நான்காண்டு தாதியர் பட்டப்படிப்புக் கற்க வாய்ப்பு உண்டு. அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரிகளில் விண்ணப்பம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

#### 7) அஞ்சல் வழிக்கல்வி-

கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்புப் பெறாத மாணவர்கள் அஞ்சல் வழியில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ்ப்படிப்புப் படிக்க வாய்ப்பு உண்டு. தமிழ் நாட்டில் சென்னை, மதுரை காமராஜர், சிதம்பரம் அண்ணாமலை, திருச்சி பாரதி தாசன், கோவை பாரதியார், பாண்டிச்சேரி ஆகிய பல்கலைக் கழகங்களின் தொலைக்கல்வி இயக்குநரகங்கள் மூலம் அஞ்சல் வழிக்கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றன. மேலும், புதுதில்லி இந்திராகாந்தி பல்கலைக்கழகமும் இவ்விதக் கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றது.

1. பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் பட்டப்படிப்பினை நேரடியாக மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.

2. பட்டம் பெற்ற மாணவர்கள் பட்ட மேற்பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்பட்டயப் படிப்பு பாடங்களில் சேர்ந்து படிக்க வாய்ப்பு உண்டு.

(10-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# நங்கை உணர்த்திய நாட்டுப்பற்று

சு. சிவா
இ.அ. முகாம், வாழவந்தான்கோட்டை

கண்ணாடி முன் நின்றிருந்தாள் மாலதி. இருப்பத்தி எட்டு வயதாகி விட்டது. இன்னும் கல்யாணம் ஆகவில்லை. இந்தக் கவலை துளி அளவு கூட இல்லாமல் தன் கூந்தலைப் பின்னிக்



கொண்டிருந்தாள். நெற்றியின் ஓரம் புரளுகின்ற மயிர்க்கற்றையைச் சரிப்படுத்தி ஸ்டிக்கர் பொட்டை ஒட்டி, இடது கையில் பவுடரைத் தட்டி இரு உள்ளங்கைகளிலும் நளினமாகத் தேய்த்து, முகத்தில் மிருதுவாகத் தடவிக்கொண்டு கண்ணாடியைப் பார்த்தாள். இருபத்தி எட்டு வயது மாலதி இருபது வயது மாலதியாகத் தெரிந்ததை எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

மாலதி முத்தையாவிற்கு ஒரே பெண். இலங்கையில் இருக்கும் போதே தனது தங்கை மகன் முகுந்தனுக்கு மாலதியைத் திருமணம் பேசி இருந்தார்கள். மாலதியின் மனமும் முகுந்தனின் மனமும் ஒன்றோடு ஒன்று கலந்து இருப்பதை இரு வீட்டார்களும் அறிவார்கள். அவர்கள் விருப்பம் அறிந்துதான் அந்தத் திருமணத்திற்கும் ஏற்பாடு செய்தார்கள்.

ஆனால் விதி அவர்களைப் பிரித்து விட்டது. இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு, இரண்டு குடும்பங்களும் ஆளுக்கொரு திசையில் வாழ்ந்தார்கள்.

அவர்கள் பிரிந்து ஆறு வருடங்களுக்குப் பிறகு இப்போது தான் இரண்டு குடும்பங்களும் சந்தித்து இருக்கின்றன. மாலதி தனது தாய், தந்தையுடன் இந்தியாவில் வசிக்கின்றாள். முகுந்தன் பிரான்சில் இருந்தான். நேற்றுத்தான் இந்தியா வந்து சேர்ந்தான். முகுந்தனின் தாயும் தந்தையும் இரு கிழமைக்கு முன்னதாகவே இலங்கையில் இருந்து இந்தியா வந்து விட்டார்கள்.

நின்றுவிட்ட முகுந்தன்-மாலதி திருமணத்தை முடிக்கத் தான் இந்தத் திடீர் சந்திப்பு

நேற்று இரவே திருமணப் பேச்சு எல்லாம் நல்லபடியாக முடிந்து விட்டது அனைவரும் திருமணத்தை நினைத்து மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்க அத்தனைக்கும் காரணமான மாலதியின் மனதில் மட்டும் இந்தத் திருமணத்தை நினைத்துக்கலக்கம்.

இதற்கு காரணம் நேற்று இரவு நடந்த திருமணப் பேச்சில் முகுந்தன் கூறிய வார்த்தை மாலதியின் மனதை அரித்துக் கொண்டே இருந்ததுதான்..

''எங்கள் திருமணம் முடிந்ததும் பிரான்ஸ் போகின்றோம். அங்குதான் இனி நிரந்தரமாக வாழப் போகின்றோம்'' என்று முகுந்தன் கூறியதும் உண்மையில் மாலதி அதிர்ந்து போனாள் பெரியவர்கள் இருக்கின்றார்கள் என்று எதுவும் பேசாமல் இருந்து விட்டாள். மனம் மட்டும் அமைதி இல்லாமல் அலைபாய்ந்து கொண்டிருந்தது. காலையில் இது பற்றி முகுந்தனிடம் பேசிவிடுவது என்று இரவு உறங்கி விட்டாள். ஆனால் இன்றும் இது பற்றி முகுந்தனிடம் பேசவில்லை

கண்ணாடி முன் நின்று தன்னை சீர்படுத்திக்கொண்ட மாலதி ஜன்னல் வழியாக வெளியில் தனது பார்வையைச் செலுத்தினாள். முகுந்தன் மரத்தின் கீழ் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான் இதுதான் சரியான தருணம் என்று எண்ணிய மாலதி, கண்ணாடியில் இருந்து தனது உருவத்தை விலக்கி வெளியில் வந்து முகுந்தன் இருந்த திசையை நோக்கிச் சென்றாள்.

அருகில் சென்ற மாலதி எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் திகைத்து நின்றாள். மாலதியைக் கண்ட முகுந்தன் பேப்பரை கீழே வைத்து விட்டு ''என்ன மாலதி' என்றான்.

மாலதி தயக்கமாக ''நாங்கள் இரண்டு பேரும் பிரான்சுல போய் நிரந்தரமாகத் தங்கத்தான் வேண்டுமா?'' என்று அவன் முகத்தை பார்க்காமலேயே கேட்டாள்.

''ஏன் மாலதி விருப்பம் இல்லாதது போல் பேசுகின்றாய். அங்கு வர உனக்குப் பிடிக்கவில்லையா?' என்றான் முகுந்தன்.

''நம் நாட்டில் என்ன குறை? அனைவரையும் பிரிந்து சென்று அனாதைகள் போல் அங்கு வாழத்தான் வேண்டுமா?'' என்று கேட்டாள் மாலதி.

''மாலதி நீபுரியாமல் பேசுகின்றாய். எத்தனை பேர் அங்கு போகச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்று அலைகிறார்கள். நீ கிடைத்த சந்தர்ப்பத்தையும் விடச் சொல்கின்றாயே. நம் நாடு நமக்கு முக்கியம் தான். அதற்காக நம் வாழ்க்கையை அழித்துக் கொள்ள முடியுமா? மாலதி நீ அங்கு வந்து பார் சொர்க்கத்தில் இருப்பது போல இருக்கும். அங்கு வந்து விட்டாய் என்றால் திரும்பி வரவே

## சிறுகதை

மனம் இருக்காது. நம் நாட்டில் இருந்து நாம் ஏன் கஷ்டப்பட வேண்டும்? அங்கு போய் சந்தோசமாக இருக்கலாமே'' என்று முகுந்தன் சுயநலமாகப் பேசியதும் மாலதி தன் எதிரே இருப்பவர் தன் வருங்காலக் கணவன் என்பதைக்கூட மறந்து, உணர்ச்சி வசப்பட்டு தன் உள்ளத்தில் உள்ள குமுறல்களை அவனிடம் கோபத்துடன் கொட்டத் தொடங்கினாள்.

''அங்கு சொர்க்கம்போல் இருக்கின்றது என்றால் நம் நாடு என்ன நரகமா? அங்கு இப்போது வசிப்பவர்கள் எல்லாம் மனிதர்கள் இல்லையா? நமக்காக உயிரைத் துச்சமாக மதித்துப் போராடி வருகின்றார்களே! அவர்கள் வேறு வேலை இல்லாமலா போராடுகிறார்கள்? தியாகம் செய்கிறார்கள்? நமக்காக அங்கு எத்தனையோ உயிர்கள் மடிந்து கொண்டிருக்க, நமது உயிரைப் பெரிதாக மதித்து அண்டை நாட்டில் அடைக்கலம்புகுந்தது மட்டுமில்லாமல் முகம் தெரியாத மனிதர்கள் வாழும் நாட்டில் நிரந்தரமாகத் தங்கி விடலாம் என்று சொல்ல உங்களுக்கு எப்படி மனம் வந்தது? தமிழ் பேசும் இந்தத் தமிழ்நாட்டில் இருக்கும் போதே எப்போது ஊருக்கு செல்வோம். நம்மை வளர்த்து ஆளாக்கிய மண்ணை எப்போது மிதிப்போம். பழைய முகங்களை எப்போது சந்திப்போம் என்று தினமும் கனவு கண்டு கொண்டிருக்கின்றேன். மொழி தெரியாத அந்த நாட்டில் எப்படி என்னால் வாழ முடியும்?

உங்கள் மேல் நான் வைத்திருக்கும் அன்பை வார்த்தைகளால் சொல்ல இயலாது. உங்கள் மேல் நான் உயிரையே வைத்துள்ளேன். நீங்கள் இல்லாத ஒரு வாழ்க்கையை நான் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டேன். ஆனால் நான் வளர்ந்த ஈழ மண்ணை வெறுத்து என்னால் உங்களோடு வர முடியாது. என்னை மன்னித்து விடுங்கள்.

நான் ஈழத்தை உயிராக எண்ணவில்லை. அதற்கும் மேல் நேசிக்கிறேன். உயிர் கூட என் உடலை விட்டுப் பிரிந்துவிடும். ஆனால் எனது தாய் நாட்டை என்னால் பிரியவும் முடியாது. மறக்கவும் முடியாது. எனது உடல் ஈழத்திலேயே வாழ்ந்து, மடிந்து அங்கேயே புதைந்து அந்த மண்ணோடு தான் கலக்க வேண்டும்.'' என்று ஏதேதோ படபடவென்று பேசிவிட்டு கண்ணீரைச் சிந்திக்கொண்டு

''பெற்ற தாயும்
பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும்
நனி சிறந்தனவே!''

''இருந் தமிழ் உன்னால்
இருந்தேன் —வனோர்
விருந் தமிழ்தமானாலும்
வேண்டேன்''

வீட்டுக்குள் செல்லும் மாலதியை வியப்போடு பார்த்தான் முகுந்தன்.

மாலதியைப்பற்றி நினைக்கும் போது முகுந்தனுக்குப் பெருமையாகவும் இருந்தது. அவள் சொன்னதில் இருந்த உண்மையை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அன்பு பாசத்தை அறியாமல் ஆறு வருடம் பணத்திற்காக வாழ்ந்த இயந்திர வாழ்க்கையை நினைக்கும் போது எதையோ இழந்துவிட்டதை உணர்ந்தான், ''எனக்கு மட்டும் எப்படி நாட்டுப்பற்று இல்லாமல் போனது? அதே மண்ணில் தானே நானும் பிறந்து வளர்ந்தேன்! நான் எப்போது சுயநலவாதியாக் மாறினேன்? என் உயிரின் மீது அவ்வளவு ஆசையா?'' என்று பலவாறு சிந்தனை செய்தவனுக்கு பல உண்மைகள் புலப்பட்டன. தான் இப்போது நாட்டைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை என்பதை நினைக்கும் போது முகுந்தனுக்கு அவமானமாக இருந்தது.

தனக்கும் நாட்டுப்பற்று இருக்கின்றது என்பதை முகுந்தன் மாலதிக்கு நிரூபிக்க நினைத்தான். திருமணம் முடிந்ததும் மாலதியோடு ஈழத்தில்தான் வாழ்வது என்று உறுதி பூண்டான்.

# பங்களிக்கப் பயின்றோம்

தன்னையறிந்தேன் பிறரை அறிந்தேன்-அத்துடன்
தன்னலம் மறந்து பிறர்நலம் உணர்ந்தேன்
குறிக்கோளற்ற வாழ்க்கையா ? குறிக்கோளுடைய வாழ்க்கையா ?
குறிக்கோளுடன் வாழ்க! அதற்கு நிகரேதடா?
எண்ணங்கள் எத்தனை எத்தனையோ ! உன் மனதில்-உயர்
எண்ணத்தை உள்மனதில் உறுதியாக வையடா !

அடிப்படைத் தேவையுடன் பாதுகாப்பைப் பெற்றான்-அதுமட்டுமா?
அன்புடன் சுயமதிப்பைப் பெற்று படைப்பாற்றலைப் பெற்று விட்டானே
அவன்தான் மானுடத்தை வெல்லவந்தவன்!

''தகவல் தொடர்பில் தகவல் பரிமாற்றம் ஏற்பட்டது-அத்துடன்
தகவல் திரிபால் ஏற்பட்ட தடுமாற்றந்தான் என்னே வியப்பு !
தக்க முறையில் தகவலைப் பெற்றுநீ-தக்க முறையில் தெளிவுபெற்று
தக்க முறையில் அதைக் கொண்டு சென்று-தக்க முறையில்
தக்க இடமறிந்து காலமறிந்து-தக்க விளக்கம் தந்து-அத்தகவல்
தக்க முறையில் தக்க வைக்க வேண்டும்

மேடைப் பேச்சாளனே, நீ மேடையில் பேசவேண்டுமா-முதலில் உன்
பேச்சுத் தலைப்பறிந்து பேசும் இடமறிந்து, காலமறிந்து-உன்
பேச்சைக் கேட்கும் மக்கள் மனமறிந்து-உடல் கையசைவுடன்
பேச்சுத்தொனியுடன் இசைப்பாடல் கவிபுனைந்து பேசுவாயாக !

ஒரு கையால் தட்டினால் ஓசையெழுமா ? பலகை தட்டினால்தான் உண்டு
ஒன்று பட்டால் உண்டு வாழவு என்பார்கள்-எனவே
ஒருவன் என்ற நிலை மாறி மனிதர்கள் குழுவாகலாமே!
குழுவில் ''நீ தேக்க நிலையை உண்டாக்காதே -பார்வையாளர்
என்ற நிலையை மாற்றி-பங்களிப்பவராய்
குழுவில் நீ பங்களித்து தலைவர் நிலையை அடைவாய்!

-சைனியா
கும்மிடிப்பூண்டி

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## ஈழக் குழந்தைகள்

அம்மா என்றழைக்கு முன்னர்
'ஐயோ ஆர்மி' என
அலறக்கற்று விடுகின்றனர்!

தத்தித் தவழ்ந்து
எட்டி நடந்து பழகு முன்னர்
பட பட பட வென
முழங்குகின்ற வெடி முழக்கம்
கேட்டு
தட தட தட வென
ஓடக்கற்று விடுகின்றனர்!

ஏபிசிடி
படிக்கு முன்னர்
ஏகே47ஐ
வெடிக்கக் கற்றுவிடுகின்றனர்!

ஆடிப்பாடி விளையாடும்
வயதினை எட்டு முன்னர்
ஈழத்தின் விடியலுக்காக
ஈகம் செய்யக் கற்று
விடுகின்றனர்!

து. துரைநேசன்
இ.அ.முகாம்,
தோப்புக்கொல்லை,
புதுக்கோட்டை.

## தமிழகத்தின் தலைவர்கட்கு...

தண்ணீருக்காக போராடும்
தமிழகத்தின் தலைவர்களே
ஈழத்து மக்களின்
கண்ணீரில் ஒரு
காவேரி ஓடுவதை
நீங்கள் அறிவீர்களா!

கள்ளச் சாராயத்தை
ஒழிப்பதற்கு
கடையடைப்பு நடத்தும்
நீங்கள்
தமிழ் ஈழத்தை
காப்பதற்கு
ஒரு படையெடுப்பு
நடத்தக் கூடாதா?

இந்தி மொழியின்
ஆதிக்கத்தை எதிர்த்து
குரல் கொடுக்கும்
நீங்கள்
தமிழ் இனத்தின்
அழிவை எதிர்த்து
குரல் கொடுக்க கூடாதா?

நாங்கள்
தனிநாடு கேட்கவில்லை
தமிழனுக்கு என்று ஒரு
நாடுதான் கேட்கின்றோம்!

வானத்தின் பனித்துளிகள்
கண்ணீரைத் துடைக்கும்
உங்கள்
காலை கதிரவன்
தமிழ் ஈழத்தின்
கண்ணீரை
எப்போது துடைக்கும்?

சு. சிவா
இ.அ. முகாம்
வாழவந்தான் கோட்டை

## கண்ணீர்க் கடிதம்!

(அரபு நாட்டில் பணிபுரியும் ஈழமகளின்
கண்ணீர் ததும்பல்)

D. ரோய் ரோச்
கீழ்ப்புதுப்பட்டு

அன்பின் அம்மாவுக்கு
வீட்டில் அனைவரும் நலம் தானே!
பணத்துக்காகப் பாத்திரம் தேய்த்து
கையெல்லாம் ரணம்!
மற்றபடி நான் இங்கு நலம்!?
தம்பியைக் கல்லுடைக்க அனுப்பாதே
அவன் படிக்கட்டும்
பல்லுடைய பாய் அடித்ததால்
மனம் உடைந்து போனேன்
நீ என்னைச் செல்லமாகத் தட்டிய
சந்தர்ப்பங்களை நினைத்து!
மற்றபடி நான் இங்கு நலம்!?
உடம்பை நன்றாகப் பார்த்துக்கொள்
மருந்து வாங்கப் பணம் அனுப்பியுள்ளேன்
குளிர் காய்ச்சலில் நடுங்கிப் படுக்கையில் இருந்த போது
சுடுநீர் ஊற்றி ஷேக்கு எழுப்பியதால்
உடம்பில் வடுமாறா சில காயங்கள்!
மற்றபடி நான் இங்கு நலம்!?
தங்கச்சிக்காவது காலா காலத்தில்
கலியாணத்தைப் பண்ணி வை!
ஷேட்டுப் பையனின் காமவெறிக்குப் பலியான
என் கற்பைப் பற்றி
அப்பாவிடமும் அயலாரிடமும் சொல்லி அழாதே!
மற்றபடி நான் இங்கு நலம்!?
வட்டிக்கு வாங்கிய கடனையெல்லாம்
முடிந்தவரை அடைத்து விடு!
வெட்ட வெயிலில்
ஒட்டகச் சாணி வாரிப் போட்டு
களைப்பாறக் கொஞ்சம் கண்ணயர்ந்ததால்
கஞ்சன் ஷேக்கிடம் கணக்கில்லா சவுக்கடி வாங்கினேன்!
மற்றபடி நான் இங்கு நலம்!?
பாதி வயிற்றோடு அப்பாவை வேலைக்கனுப்பாதே
பழஞ்சோறாவது கட்டி அனுப்பு..
எங்கள் எஜமானுக்கு-நான்
கட்டில் சுகம் தர மறுத்ததால்
இரண்டு நாட்கள் பட்டினி போடப்பட்டேன்!
மற்றபடி நான் இங்கு நலம்!?
சொற்களின்றி சொச்சத்தை
எழுத முடியாமல் தவிக்கும்
என் சோக மொழிகளை
தமிழ் எதிரி ஒவ்வொருவனும் சாகும் வரை...
ஈழத்தில் இருள் அகலும் வரை...
ஈழமண்ணில் கேள்விக்குறியோடு இருக்கும் பிரச்சினைக்கு
வளமான ஒரு முற்றுப்புள்ளி வரும் வரை...
செல்லரிக்காமல் பார்த்துக் கொள்...!
கவர் வாங்கப்
பணம் இருந்தால் மட்டும்
பதில் அனுப்பு...!?

இப்படிக்கு
கண்ணீரில் உறைந்த உதிரத்துளிகளுடன்
உன் அன்பு மகள்.

## அனாதை ஆனேன்

சமாதானம் கேட்டு
சண்டை ஒன்று வந்தது
சல சல என நான் ஓடி
பெரும் சங்கடத்தால்
படகில் ஏறி
பயணம் செய்தேன்
பாதியிலே நின்று விட்டது படகு
பாச வலை வீச யாரும் இல்லை
தாண்டு கொண்டே இருந்தது படகு
தாயோ தண்ணீரில் மூழ்கி விட்டாள்
தந்தையோ தண்ணீரில் நீந்தி விட்டார்
நானோ அலையால்-அடித்து
ஆபத்தால் துடித்து
கண்ணீரால் கசந்து
கரையை அடைந்தேன்!

ஆர். அசோக்குமார்
இ.அ. முகாம் தென்பள்ளிப்பட்டு

## ஏன்? ஏன்?

புழுதிதனில் புதைந்த மலரினைப் போல்
தமிழனும் புதைந்தே போனது ஏன்?
உரிமை கேட்டவன் குரல்கள் இன்று
ஊனமுற்று ஊமையாய் ஆனது ஏன்?
நிஜங்களை நிர்மூலமாக்கிய பொய்யொன்றின்
நியாயம் மட்டும் அங்கு நிலைத்தது ஏன்?
ஒளிவீசிய ஈழவிழிகளின் பார்வைகள்
ஒளி குன்றியது ஏன்? ஏன்? ஏன்

கல்வியின் கண்களைக் குத்தி விட்டு
காலமெல்லாம் காட்டிடை எமை விட்டது ஏன்?
கற்போடு கண்ணாமூச்சிக் களியாட்டமாடி
கன்னிக்கு கவலைகளை தலைமேல் போட்டது ஏன்?
உயிர்களின் ஆழம் வரை முத்தமிட
உங்கள் ஆயுதம் ஆசைப்பட்டது ஏன்?
கவி பாடி, காதல் பாடி வாழ்ந்த ஈழத்தார்
காரிருளில் கண்கலங்கி, ஏங்கிக் கரைவது ஏன்?

சொந்தங்கள் சுமை தாங்கும் சுகமானதொரு
சொர்க்கம் எமை நீங்கிப் போனது ஏன்?
நண்பர்கள் நமை வாழ்த்த நாமும் வாழ்த்த
நல்வாழ்வொன்று நழுவிப் பறந்தது ஏன்? ஏன்?
தமிழ் வளர்ந்த ஊரும் நாமிருந்த வீடும்
தரைமட்டமாகிப் பாழ்படுவது ஏன்?
சரித்திரம் படைக்க தமிழன் கண்ட கனவுகள்
சரிந்து கலைந்து சாவது ஏன்? ஏன்?

சோகவி. செல்வநாதன்,
தோப்புக்கொல்லை, புதுக்கோட்டை.

## மனம் நொந்தால் அழுகை வரும்

குடியிருந்த கோயில்களில் குண்டு விழுந்தது! எம்
கோடி எண்ணம் பலவும் அங்கே கறை படிந்தது
கூவும் சேவல் கூரையிலே குறுகி நின்றது-அந்தக்
குண்டுச் சத்தம் கேட்டதினால் கூவ மறுத்தது

குழந்தை வாழ்வை எண்ணி மனம்
குமுறி அழுதது-அதைக்
குன்றின் மீது அமர்த்திடவே
கடலைக் கடந்தது!

கவலையற்ற வாழ்வு ஒன்று
உதிக்குமென்றுதான்
கடலைக் கடந்து நாங்கள் பலர்
குடி பெயர்ந்தது
குடியமர்ந்த இடத்தில் நடக்கும்
கூத்தை கூறவா (கேளுங்கள்)
குமுறும் மக்கள் மனநிலையை
கூட்டிப் பெருக்கவா (கூட்டிப் பாருங்கள்)

குடியிருக்கும் இடத்தை மக்கள்
கூட்டிப் பெருக்கினார்-தம்
குழந்தை அறிவைப் பெருக்கிடவே
கல்வி புகட்டினார்
கொஞ்சு மொழி பேசி மக்கள்
மனதைக் கவர்ந்தார்-பின்
குடியிருக்கும் இடத்தை பெருக்க
கூனிக் குறுகினார்

குண்டர் போட்ட குண்டதனால்
குடிசை இடிந்தது-இன்று
குடிபெயர்ந்த நிலமை உணர
சனம் மறக்குது!
குடக்கனி போல் இருந்த மக்கள்
குழையத் தொடங்கினார்-எம்
குறையைப் பிறர் கூறுமளவில்
குனிந்து நடக்குறார்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்றும்
கூறுவார்-அதுபோல்
கூடி நன்மை செய்வதையும்
குறையாய்க் கூறுவார்
கட்டெறும்பு சுட்டெரிக்கும்
காயமிதப்பா-அதை
கனவில் கூட நினைவுபடுத்தா
மக்கள் தானப்பா!

அன்பை விட்டுப் பண்பை நீக்கி
அடிபடுவதோ?-நாம்
ஆறடிக்குச் செல்கையில்-எதைக்
கொண்டு செல்வதோ?

அன்பைப் பகர்ந்து
பண்பாய்ப் பழக
பழகிக் கொள்ளுவோம்-உயர்
பண்பை மறக்கும் மனித மனத்தின்
மமதை நீக்குவோம்!

எஸ்.பி.எஸ். ரமணி

படிப்பகம்

www.padippakam.com



# தகவல் தொடர்பு தலைமைத்துவம்

## அறிய வேண்டிய பயிற்சி

இலங்கைத் தமிழர் அனைவரும்
இனிய வாழ்வு பெற்றிடவே-அடிகள்
தந்தார் அரிய பயிற்சியொன்றை-அதுதான்
தகவல் தொடர்பும், தலைமைத்துவமும்!
தகவல் சரியாக இல்லையெனில்
தலைவலி தானே வந்துவிடும்
கிடைக்கும் தகவல் சரியென்றால்
கிடைக்கும் அதற்கு நன்மதிப்பு
பரிமாறப்படும் தகவல் என்றும்-யாருக்கும்
பாதிப்பினைத் தரக்கூடாது-எல்லோரிடமும்
நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்-என்றும்
நன்மதிப்பை பெற்றிட வேண்டும்
தலைவர் என்றொருவர் இருந்தால்-அவர்
தலைமைப் பண்புகளை அறிந்திருக்க வேண்டும்
சர்வாதிகாரத் தலைவராக இல்லாமல்
சனநாயகத் தலைவராக இருக்க வேண்டும்
பிரச்சினைகள் ஏற்பட்டால்-கண்டு
பிடிக்க வேண்டும் அதன் காரணத்தை!
பிறர் மதிப்பை பெறக்கூடிய வகையில்-நாம்
பின் எடுக்க வேண்டும் நல்ல முடிவுதனை
தனியாக நின்று செயலாற்ற வேண்டாம்-ஒரு
குழுவாக சேர்ந்து செயலாற்றுவோம்-அதிலும்
பார்வையாளராக இல்லாமல்-குழுவில்
பாய்ந்து பங்களிப்பவராக மாறிடுவோம்
அருமையான இந்தக் கருத்துக்களை-நான்
அறிந்தேன் இந்தப் பயிற்சிதனில்-மேலும்
அகதிகளாகிய அனைவருமே-அவசியம்
அறிய வேண்டிய பயிற்சி இது

R. ஜெயந்தினி
கும்மிடிப்பூண்டி

## உள்ளங்கை நெல்லிக்கனி

பயிற்சி பயிற்சி என்று பயிலவந்தோம்
பயில வந்ததுதான் தலைமைத்துவப் பயிற்சி
தன்னை அறிதல் அறிந்தவற்றை வெளிப்படுத்தல்
ஆளுமை வளர்ந்திட அருமையான கல்வி இது
அருமையான கருத்துகளை ஆழமாக விதைத்திட்டார்
அன்பாக பண்பாக அருட்தந்தை அவர்கள்
தோளோடு தோள்நின்று துணை புரிந்தனர்
துணைப்பயிற்றுநர் மற்றெல்லோரும்

குறிக்கோளோடு வாழ்ந்திட்டால்
குறித்த எல்லையை அடைந்திடலாம்
குழுவாகச் செயல்பட்டால்
குவலயமே வென்றிடலாம்

அறிஞர் யோகாரியின் ஆணித்தரமான கருத்தும்
அறிக்கை எழுதுவதன் ஆழமான பயனும்
தலைவராவதற்கு தகுந்த சான்றும்
தகவல் சொல்வதற்கு தரமுள்ள செய்தியாளரும்
தேவை என்பது தெள்ளத் தெளிவாகியது
கோட்பாட்டோடு ஐந்துவிரல் சூத்திரமும்
பிரச்சினைக்கு தீர்வு காணும் கனினிப் படவிளக்கமும்
உள்ளங்கை நெல்லிக்கனியாய்
எம் மனதில் வேரூன்றியது

மாக்களாக வாழ்ந்த எம்மை
மனித நேயத்துடன் வாழவைக்க
இலவசக் கல்விதனை இயன்றளவு தந்துதவிய
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்கு
எம் இனிய நன்றியை இருகரம் கூப்பி செலுத்துகின்றோம்

S. கிளமென்ற்
பரமத்தி

## பிரச்சினை தீர்வுகாண சூத்திரம் அறிந்தோம்

ஈழத்து அகதிகள் தான் நாங்கள்
இந்தியத் தாயிடம் தஞ்சம் கொண்டோம்
ஈ.ஏ.ம.கழகம் தந்ததுதான் பயிற்சிகள் பல
இப்பயிற்சியில் ஒன்றுதான் தலைமைத்துவமும்
தகவல் தொடர்பும்
பயிற்சியின் போதுதான் நம்மையும் அறிந்து பிறரையும்
அறிந்தோம்
குறிக்கோள் உள்ள வாழ்க்கையே சிறந்தது என
அறிந்தோம்
தகவல் தான் தந்தது ஒரு சிறு கதையை
தகவல் திரிபுதான் பட்டதும் திகைத்துத்தான் போனோம்

தலைமைக்குத் தான் வந்துவிட்டோம்!
தலைமைக்கு கீழ்ப்படிந்தும் வாழ்ந்தோம்!
தலைமை வகித்தும் வாழ்ந்தோம்
என்றெல்லாம் அறிந்து கொண்டோம்!
சிறந்த தலைமை எதுவெனவும் அறிந்து கொண்டோம்!

நமக்குள் பிரச்சினைகள் உருவாகின்றன
காரணமும் தெரிவதில்லை
தீர்க்கவும் தான் முடிவதில்லை
பயிற்சியில் தான் தெளிவாகினோம்

பிரச்சினை உருவாகக் காரணத்தைக் கண்டறிந்தோம்
தீர்வு காணச் சூத்திரமும் கண்டறிந்தோம்
சேவைதான் தேவை ஆடம்பரம் தேவையில்லை
என்பதையும் புரிந்து கொண்டோமே

பயிற்சியில்தான் எத்தனை வகைக் கலைகள்!
பயிற்சிக்கேற்ற வினோதமான விளையாட்டுகள்!
பயிற்சிக்கேற்ற விதமான நாடகங்கள்!
வகை வகையான மேடைப் பேச்சுக்கள்!

அத்தனையும் நம்மை மேலும் வளர்த்தன.

T. தனராஜினி
தாப்பத்தி

## எப்படி நன்றி சொல்வோம்!

தகவல் தொடர்பும் தலைமைத்துவமும் என்று
அழைத்தனர் எம்மை பயிற்சிக்கு
அழைத்தன் பேரில் வந்தோம்
நாமும் இங்கு...

அருட்தந்தை அவர்களின்
ஆதரவால் தொடங்கியது பயிற்சியும்!

பயிற்சியின் போதுதான் நாமும் உணர்ந்தோம்
பற்பல நன்மைகள் உண்டென்பதை!

ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம்
ஒற்றுமை உணர்வையும் வளர்த்துக்கொண்டோம்

நம்மை நாமே அறிந்து கொண்டோம்
நம்முள் இருந்த ஆற்றலையும் வெளியிட்டோம்!

பங்கேற்றல் பயிற்சி மூலம் பல
பண்புகளையும் வளர்த்துக் கொண்டோம்

மனித மனம் பற்றிய விளக்கத்தினால் நம்
மன நிலையையும் அறிந்து கொண்டோம்

தகவல் பரிமாற்றத்தினையும்
தன்னிகரில்லாது கற்றுக் கொண்டோம்

மக்கள் நோக்கும் மகத்தானது என
மாண்புடன் நாமும் தெரிந்து கொண்டோம்
உணர்ச்சிகளையும் புரிந்து கொண்டோம்
உள்ளார்ந்த நிலைகளையும் அறிந்து கொண்டோம்

தலைமைத்துவப் பண்பையும் கற்றுக் கொண்டோம்
தலைவராக நம்மையும் உயர்த்திக் கொண்டோம்!

ஒன்றல்ல இரண்டல்ல...
எத்தனை எத்தனை கருத்துக்கள்

அத்தனையும் கற்றிட்டோம்
அழகு தமிழில் ஆர்வமுடன் நாமும்!

நம் வாழ்க்கையினை உயர்த்த எண்ணி,
நமக்காக அரும்பாடு படும்

அருட்தந்தை அவர்கட்கும்
ஆசிரியப் பெருமக்கட்கும்

என்ன வென்று சொல்லிடுவோம்
எமது உளமார்ந்த நன்றியினை

பயிற்சிக்கு எம்மை அழைத்திட்ட
ஈழ ஏதிலியர் கழகத்திற்கும்

என்றும் எமது நன்றியினை
இனிதே நாமும் தெரிவித்திடுவோம்!

வி. யோகராணி
கும்மிடிப்பூண்டி

## ஒரு அகதியின் புலம்பல்

வாழ ஆசைப்பட்டது பலவிதம்
அதனால் வெடித்தது கலவரம்
வாழ வழியின்றி வந்தோம் தமிழகம்
வாழ வழிகாட்டுங்களேன் சிலரேனும்
வந்த துன்பம் மாற்றுங்களேன் சிறிதேனும்!

P.P. ஜேக்கப் டைசன்
இ-அ. முகாம், கும்மிடிப்பூண்டி

## செய்திச் சரம்

22-3-97

இலங்கையில் சண்டையை நிறுத்தி, மீண்டும் சகஜ வாழ்க்கையை ஏற்படுத்த இந்தியா நிர்ப்பந்தம் செய்ய வேண்டும் என்று திண்டுக்கல்லில் டாக்டர் இராமதாஸ் கூறியுள்ளார்.
(தினமணி)

புலிகளுக்கு மருந்து கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட மாலினி திசநாயக மற்றும் பாண்டியன் என்கிற முரளிதரன் ஆகியோருக்கு அடுத்த மாதம் 4ம் தேதி வரை காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.
(கதிரவன்)

23-3-97

நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் முகமாக இலங்கை தமிழ் அகதி மாணவர்களுக்கு தமிழக மருத்துவ கல்லூரிகளில் 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் எம் ஜி. ஆர். மருத்துவ பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு தமிழக முதல்வர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.
(தினகரன், தினத்தந்தி, கதிரவன், இந்து)

இலங்கையில் நகராட்சிகள் உள்பட உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடந்த தேர்தலில் அதிபர் சந்திரிகாவின் கூட்டணி 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட நகராட்சிகளை பிடித்து அமோக வெற்றி பெற்றுள்ளது.
(தினமணி, தினகரன் தினமலர், கதிரவன், இந்து)

இலங்கை தனது இனப் பிரச்சினையையும், கச்சத் தீவில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கிற உரிமையையும் இணைத்து பேசுவது சரியல்ல. இரண்டும் வெவ்வேறு பிரச்சினைகள். யாத்ரீகர்களுக்கான உரிமை கிடைக்க வேண்டும் என மத்திய அரசை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்று முதலமைச்சர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.
(தினமணி, தினகரன், தினமலர், இந்து)

24-3-97

இலங்கை உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் மக்கள் முன்னணி அமோக வெற்றி பெற்றதை தொடர்ந்து தமிழர் பகுதிக்கு சுயாட்சி கொடுப்பது உள்பட சமாதான திட்டங்களை அறிவித்து அதன்படி செயல்பட வேண்டும் என்று அதிபர் சந்திரிகாவை மிதவாத தமிழர் கட்சிகள் வற்புறுத்தியுள்ளன.
(தினகரன்)

இலங்கையில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் முறைகேடுகள் நடந்திருப்பதாக கூறி சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் விக்ரமசிங்க நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.
(தினகரன், தினமலர், இந்து)

படிப்பகம்

www.padippakam.com

# உயர் கல்வி உதவியும் மாணவர்களின் பொதுச் சேவையும்

தமிழகத்தில் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உயர் கல்வி உதவிகளை ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக் கழகம் வழங்கி வருகின்றது. இக் கல்வி உதவியினைப் பெறும் மாணவர்கள் தாம் பெறும் உதவியைப் பிரதிபலிக்கும் வண்ணம் தம் மக்கள் மத்தியில் பொதுச் சேவையில் ஈடுபட வேண்டும் என்ற விதிமுறைக்கமைய கழகம் உதவிகளை வழங்குகின்றது பல்வேறு நாடுகளில் எம்மை யார் என்று தெரியாத பலர் செய்யும் தொண்டினால் கழகத்திற்கு நிதி உதவி கிடைக்கின்றது. இவ்வாறு திரட்டப்படும் நிதியினை வழங்கும் போது கழகத்திற்குப் பல பொறுப்புகள் உள்ளன. அவற்றைக் கண்டிப்பாக நிறைவேற்றியாக வேண்டும்.

1 உதவிகள் தேவையான நிலையிலுள்ள நலிந்த பிரிவினருக்கு மட்டுமே உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

மக்கள் சமுதாயத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அவசியமான தேவைகளைக் கவனிக்க வேண்டும்.

3. நம்மை அறியாதவர் செய்யும் தொண்டினால் பயன் பெறும் மக்கள் தாமே தம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு சிறிதளவாவது பாடுபட வேண்டும் என்ற உணர்ச்சியை வளர்ப்பதுடன் சமுதாய சேவையில் மக்களை ஈடுபடுத்தல் வேண்டும்.

### எழுந்து நிற்கும் வினா

இவ்வழியில் கழகத்தினால் வழங்கப்படும் உதவிகளில் பெரும் உதவியினைப் பெறும் நம்மிடையே உள்ள உயர் கல்வி மாணவர்கள் தம் சமுதாய முன்னேற்றத்திற்கு உதவ முன் வர வேண்டும். ஆனால் தற்போது தமிழகத்தில் உதவி பெறும் தொன்னூறு விதமான மாணவர்களில் 50% ஆனோர் உதவியைப் பெற முன்னிற்கும் அதே வேளையில் சேவையில் ஈடுபடாமல் இருக்க எத்தனையோ காரணங்களைக் கண்டு பிடிக்கின்றார்கள்.

இவ்வாறு சேவைக்குப்பின் னிற்கும் மாணவர்களின் பெற்றோரும் அவர்களைச் சேவைக்கு ஊக்குவிக்காமல் அதனைச் செய்யாமல் இருப்பதற்கே உதவியாக உள்ளனர். இம் மாணவர்களின் நடவடிக்கைகளினால் சிறப்பாக சேவையாற்றும் மாணவர்களின் ஊக்கம் குறைந்து போகுமா? என்ற கேள்வி எழும்புகிறது.

உயர் கல்வி உதவியினால் தான் பெரும் பிரச்சினை. அதைக் கொடுப்பதை நிறுத்தினால் எமக்குப்பிரச்சினைகளே வராது என்று பல தொண்டர்களே கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் பெரும் சிரமத்திற்கு மத்தியில் பெற்று வழங்கப்படும் இவ்வுதவிகளை நிறுத்துவதா? என்ற கேள்வி எழுகின்றது. மாணவர் சமுதாயம் நாட்டின் ஊன்றுகோல்கள். அச்சமுதாயம் நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் அக்கறை இல்லாத சமுதாயமாகுமானால் எமக்கு எதிர்காலம் இல்லை என்றுதான் நாம் பயப்பட வேண்டும். ஆகையால் மாணவர்களை சமுதாய நன்மைக்காக சேவை புரிய ஊக்குவிக்க வேண்டும்.

### மனம் உண்டேல் வழி உண்டு

அடுத்த கல்வியாண்டிலிருந்து ஏறக்குறைய 150-ஈழ அகதி முகாம் மாணவர்கள் உயர் கல்வி கற்பார்கள் என்று நம்பப்படுகின்றது. இவர்களைச் சேவை புரிய வலுக் கட்டாயப்படுத்துவது கழகத்தினால் முடியாததொன்று. ஆகையால் தம் பாடசாலைகளில் படிக்கும்போதே சேவையில் ஈடுபட்டுத் தொடர்ந்து சிறப்பாக சேவை புரியும் மாணவர்களுக்கு மட்டுமே உயர் கல்வி உதவி வழங்கப்படவேண்டும். மனம் இருந்தால் நிச்சயம் வழி கண்டு சிறிய விதத்திலாவது சமுதாய நன்மைக்குச் சேவை செய்யலாம். இல்லை என்பவர்களுக்கு உதவி முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும்.

சில மாணவர்கள் காலையிலும், மாலையிலும் தம் சக மாணவர்களுக்கு போதனை வகுப்புகள் நடத்தி வருகின்றனர் மாணவர் மன்ற கூட்டங்கள் நடத்தி சிரமதானம் செய்கின்றனர். கழகத் தொண்டர்களின் மருத்துவ சத்துணவு, மைய, ஊக்குவிப்பு சேவைகளுக்குத் துணை புரிகின்றனர். ஆனால் சிலர் வீட்டில் சாட்டுக்குப் பாடம் நடத்துகின்றனர். கழக சேவ்வயாளர்களைக் கண்டாலும் காணாத மாதிரி நழுவுகின்றனர். பொதுச் சேவை செய்ய அழைக்கும் போது மட்டும் அவர்கள் படிக்க வேண்டியுள்ளதாம். இதை விடக் கேவலம், தொண்டர்களைத் தூற்றுவதும், சேவை செய்வதாகப் பொது அறிக்கைகள் கையொப்பங்கள் அனுப்புவதுமாகும்.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் பலநூறு தொண்டர்களின் சிறப்பான சேவையாலும், தொண்டு மனப்பான்மையாலும் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் செய்யப்பட்டு வருகின்றது இத்தகைய சேவை மனப்பான்மையைக் கொச்சைப்படுத்தும் தன்னலம் மட்டும் கருதும் சில மாணவர்களுக்குத் தொடர்ந்து உதவி வழங்குவது சிறப்பான சேவையாற்றும் பல மாணவர்களின் சேவையையும் தன்னலமற்ற தொண்டாற்றும் தொண்டையும் பாதிக்காமல் தடுக்க சேவை புரியாதோருக்கு உதவியை முற்றிலும் நிறுத்த வேண்டியதே ஒரே வழியாக உள்ளது

தன்னலத்தினால் எம் சமுதாயம் சீர்கெட்டு விட்டது. இப்போது அகதியான அவல நிலையிலாவது இத்தன்னலத்தை விட்டு சமுதாய நலனைக் கருதி உழைக்க வேண்டும் இன்று பக்கத்திலுள்ளவன் துன்பம் நாளை நமதாகி விடும் என்று எண்ண வேண்டும்.

### தி.க. இராஜசேகரம் புலமைப் பரிசில் மதிப்பெண் பட்டியல்கள் திருத்தம் :

பத்தாம் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் பாடசாலை காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் வழங்கப்பட்ட இப் புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்களுடன் அனுப்பப்பட்ட மதிப்பெண் பட்டியல்களில் பல திருத்தப்பட்டவையாக இருப்பது பெரும் கவலைக்கிடமாக உள்ளதொன்று. மாணவர்கள் மத்தியில் ஏமாற்றி பரிசு பெறலாம் என்ற எண்ணம் எப்படி வந்தது? என்ற எண்ணம் கேள்வியாக உள்ளது. கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் 30% விண்ணப்பங்கள் திருத்தம் செய்யப்பட்டவை. சில இடங்களில் இப்பட்டியல்களை பாடசாலை அதிபர்களிடம் சரிபார்க்க வேண்டியிருந்தபோது ஈழ அகதி மாணவர்கள் சமுதாயத்திற்கே இது ஒரு இழுக்காக ஏற்பட்டது. மாணவர்கள் மத்தியில் இவ்வெண்ணங்களை மாற்ற என்ன செய்ய வேண்டும்? என்று கழகம் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றது.

### மாணவர்களுக்கான குறிப்பேடு, மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கல். நேரத்திற்கு வழங்க ஏற்பாடு.

1997-98ஆம் கல்வியாண்டின் போது மாணவர்களுக்கு குறிப்பேடுகள் நேர காலத்திற்குச் சென்றடைய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வழங்கப்பட்ட குறிப்பேடுகளின் தொகையின் அடிப்படையில் குறிப்பேடுகள் கொள்முதல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டு சிவகங்கை பல நோக்கு சமூக சேவை நிறுவனத்தினுல் நடத்தப்படும் அருள் அச்சகத்தில் இக்குறிப்பேடுகள் கொள்முதல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மார்ச் 21-ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற தொண்டு நிறுவனங்களின் இணைப்புக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது இக் குறிப்பேடுகளைப் பள்ளி தொடங்கிய முதல் கிழமைக்குள் அதாவது ஜூன் மாத இரண்டாம் கிழமையில் வழங்க முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### முகாம் மக்கள் ஒத்துழைப்பு அவசியமானது

நேர காலத்திற்கு குறிப்பேடுகள் வழங்கமாணவர்கள், பெற்றோர், மாணவர் மன்றத்தினர், முகாம் குழுவினர் ஆகியோர் கழகத் தொண்டர்களுக்கு ஒத்துழைப்பது மிக அவசியமானது. பெயர்களை கழகப் படிவத்தில் வகுப்பு வாரியாக பதிவு செய்து பாடசாலை தலைமை ஆசிரியர்களின் உறுதி பெற்று மாவட்ட சமூக சேவையாளரிடம் கையளிக்க வேண்டும். கழகத் தொண்டர்களும், இப்பணிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### கல்லூரி மாணவர்களுக்கும் குறிப்பேடுகள் வழங்கப்படல்

பல கோரிக்கைகளுக்கிணங்க கல்லூரி மாணவர்களுக்கும் ஐந்து சி.ஆர். குறிப்பேடுகளை வழங்கத் தொண்டு நிறுவனங்களின் இணைப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

### பழைய பாடப் புத்தகங்கள் திருப்பி கொடுப்போருக்கு மட்டும், புதிய புத்தகம்

'யேசு சபை' ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் மற்றும் பல தொண்டு நிறுவனங்கள் இணைந்து ஒன்பது, பத்து பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் வழங்குகின்றன. இத் திட்டத்தின் கீழ் மாணவர்கள் தாம் பயன்படுத்திய பாடப் புத்தகங்களை நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்க வேண்டும். இவ்வாண்டு மே மாதத்திலேயே கழகத் தொண்டர்களிடம் இப்புத்தகங்களை கையளிக்க வேண்டும். இவ்வாறு பாடப்புத்தகங்களை கையளிப்பவர்களுக்குமட்டுமே அடுத்த ஆண்டிற்கான பாடப் புத்தகங்கள் வழங்கப்படும்.

சா. செ. ச. இளங்கோ
கல்விக் குழுவிற்காக
ஈ.ஏ.ம.க.
சென்னை-8.

---

# தந்தை செல்வா நூற்றாண்டு விழா

உலகில் 31—3—1898 வானுலகில் 26—4—1977

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?'' —பாரதி

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பிரிவுற்று நின்ற ஈழத்தமிழினத்தை ஒன்றுபடுத்தி ''ஒரு தேசத்தவர்' என்ற நிலைக்கு உயர்த்தியவர் தந்தை செல்வா.

களம் பலகண்ட தானைத் தலைவன். எந்நிலையிலும் கொள்கையை விலை பேசாத பெரியார். காலிமுகப் போராட்டத்திலிருந்து காங்கேசன் துறை உபதேர்தல் வரை அச்சமின்றிப் போராடிய அகிம்சைவாதி.

ஈழத்தின் வடகீழ் எல்லையை வரையறுத்துச் சென்ற லட்சியவாதி. திருமலை யாத்திரையை எமது தமிழீழ யாத்திரையாக்கிவிட்டுச் சென்ற செம்மல்

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஒரு நல்ல கிறிஸ்தவர். அரசியலில் செல்வாக்குப் பெற ஒருபொழுதும் மதம்மாற எத்தணியாத மாபெரும் மனிதன். தமிழினத்தின் நல்ல மேய்ப்பன். ' ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார் குடிப்பிறந்தார்'' என்ற குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்.

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்'' என்பதற்கிணங்க

தமிழன் மானம் காத்தவர் தந்தை செல்வா.

இன்று ஆரம்பிக்கும் தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாதமிழன் வாழும் உலகத் தலைநகர்களில் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு எமக்கு உழைப்பையும் உயர்வையும் தர எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானாக

எமது முன்னோர்களின் தவவலியும், இன்றைய இளைஞர்-யுவதிகளின் தியாகமும், இறைவனின் திருவருளும் எமக்கு ஒரு தாயகத்தை தந்தருளட்டும்.

' இலட்சியத்தில் உறுதியும் அதன் எதிர்கால வெற்றியில் நம்பிக்கையும் ஒரு தேசிய இனத்தின் அடித்தளமாகும். இன்று எப்படி வாழினும், எங்கு வாழினும், அந்த உள்ளத்தோடு அவ்வினத்தவர்கள் முயற்சி மேற்கொள்வார்களானால், அவ்வினத்தின் விடுதலையை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.''

—தந்தை செல்வா 1973

வெளியிடுபவர்
க. முத்துக்குமாரசாமி
31-3-1997

மாணவர் ஒன்றியம்,
இலங்கை அகதிகள் முகாம்
அழியாநிலை

படிப்பகம்

www.padippakam.com



# பெண்ணும் சமுதாயக்கடமையும்

- டாக்டர் நிலானி -

"பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"

எனப் பாரதி பாடினான். இதனை உண்மையாக்க வளர்ந்து வரும் அறிவியல் உலகிலே எல்லாத் துறையிலும் பெண்களின் பங்கு சிறப்பாக இருந்து வருகிறது.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி யிவ் வையந் தழைக்குமாம்"

பாரதியார் வாழ்ந்த காலத்தில். தீர்க்க தரிசனம் போல் பெண் விடுதலைக்காகப் பாடப்பட்ட பாடல்களின் பொருள் தற்போது செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. "பெண்கள் தினம்" என வருடத்தில் ஒரு நாளைக் கொண்டாடும் அளவில் பெண்களின் பங்கு சமுதாயத்தில் இருப்பது பெண்ணினத்துக்குப் பெருமையே.

இப்படி பெண்களின் பெருமை பேசப்படும் வேளையில் அகதி முகாம்களில் வாழும் பெண்களும் தமது பெருமையை நிலைநாட்ட மறக்கவில்லை.

## அகதி முகாம் பெண்கள்

வருவாய் ஊக்குவிப்புத் திட்டமானாலும் சரி' நலப்பணிச் சேவையானாலும் சரி; பெண்களின் பங்கு கணிசமாக இருந்து வருகிறது. ஆனால் முகாம் சமுதாயம் இன்னும் கொஞ்சம், ஊக்குவித்தால் பெண்மை பெருமையடையும். பெரும் சாதனை புரியும்.

"மங்கையராகப் பிறந்திடவே நல்ல மாதவம்
செய்திட வேண்டுமம்மா"

என்று கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை சிறப்பித்த நிலையை மாற்றி, இன்றையச் சமுதாயம் பெண் பிள்ளைகள் பிறந்தாலே பாவம் என நினைக்கிறது. ஆனால் அகதி மக்களோ தமது கஷ்டமான நிலையிலும் பெண் பிள்ளைகளை எதிர்க்கவில்லை என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

அடுத்து பெண் கல்வியைப் பார்த்தோமானால் முன்பு போல் இல்லாமல் பெண்களை எத்துறையானாலும் கல்விகற்க ஊக்குவிக்கின்றனர். முகாம் மக்களிடையேயும் இவ்வெண்ணம் வளரவேண்டும். ஆண் குழந்தைகளையே சிறுவயதில் வேலைக்கு அனுப்பும் எம்மக்கள் பெண்களை விட்டுவிடுவார்களா என்ன? இந்நிலை மாறவேண்டும். பெண்களுக்கு உயர்கல்வியின் அவசியத்தை உணர்த்திச் செயல்படவேண்டும்.

## சிறுவயதுத் திருமணப் பாதிப்புகள்

பெண்களுக்கு உயர்கல்வியோ, தொழிற்கல்வியோ இல்லாததால் வீட்டில் என்ன செய்வதென அறியாமல் சிந்தனைகள் சிதறுகின்றன. சிறுவயதில் திருமணம் என்ற கொடுமை பெண்ணுக்கு ஏற்படுகிறது. பெண்கள் சிறுவயதில் திருமணம் செய்தால் உடல்ரீதியாக மட்டுமல்ல, உளரீதியாகவும் பாதிக்கப்படுவார்கள்.

பெண்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் தெரியுமானால் இப்படிப்பட்ட பிரச்சனைகளிலிருந்து விடுபடவும் அவர்களுக்கு வழி தெரியவரும்.

"உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்!
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்"

என பேர்னாட்ஷா கூறிய வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன ஒரு ஆண் சிறு பிள்ளையாக இருக்கும்போது அவன் தாய் அவனுக்கு நல்வழிகாட்டுவாள். அவனுக்குத் திருமணம் ஆனபின் மனைவியே வழியினைச் சீர்செய்வாள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண்ணிருப்பாள் என்பார்கள், பிழையான வழியில் செல்லும் ஒரு ஆடவனைத் திருத்தி நல்வழி காட்டும் மனையாட்டி பெருமைக்குரியவள்.

## தாய்ப்பாலின் உயர்வு

இப்படியெல்லாம் இருக்கையில், நான் உல்லாச வாழ்வு வாழ விரும்பி, தன் மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்பும் நம் முகாம் ஆடவர்கள் எத்தனைபேர். மனைவியின் வழிகாட்டலும் கட்டுப்பாடும் இல்லாமல் மதுவுக்கும் மாதுவுக்கும் அடிமையாகின்றனர்! சிறுவயதுப் பெண்களை மணந்து கொள்கிறார்கள்.

இதனால் குடும்பம் ஒற்றுமை இழக்கிறது. ஒரு குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் அவசியமான ஆகாரம் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் தாயின் முகத்தைப் பார்க்காமலும், தாய்ப்பாலின் வாசனை தெரியாமலும் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை எத்தனை எத்தனை என்பதை முகாம் மக்கள் சிந்திக்க வேண்டும்.

"வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா"

எனப் பாரதி பாடினான் ஆனால் நீங்கள். உங்கள் குழந்தையை வலிமை இழக்கச் செய்து விட்டீர்களே. அக் குழந்தைக்குத் தாயின் அன்பையும் அரவணைப்பையும் நீங்கள் வாங்கித் தரும் பகட்டான சட்டையாலும் பிறந்த நாள் விழாவாலும் கொடுக்க முடியுமா?

இளம் வயது விதவைகள் படும் துன்பத்தை அறிவீர். கணவன் இல்லாமல் பொருளைச் சேர்க்கவும் வேண்டும்; குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கவும் வேண்டும் என அவர்கள் அல்லல்படுகின்றனர்.

## முத்திரை பதிக்கும் முகாம் பெண்கள்

சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்தால் கழகத்தின் வருவாய் ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம் முன்னேறி வருகின்றனர். இங்கு ஒரு தாய், தந்தையின் பங்கையும் ஏற்றுக் குடும்பத்தை முன்னேற்றுகிறாள். இவள் போற்றத்தக்கவள்.

முகாம் மட்டத்தில் பல பெண்கள் தமது முத்திரையைப் பதித்தாலும் இன்னும் சிலர் சமுதாயத்தின் கிண்டல் பேச்சுக்கு அஞ்சி புற்றில் பதுங்கியிருக்கும் பாம்புகள் போல் இருக்கிறார்கள். மற்றும் சிலர் சமுதாயம் என்னவென்றாலும் பேசட்டும் நாம் நமது கடமைகளைச் சரிவர ஆற்றுவோம் என எண்ணிப் புரட்சிப் பெண்களாக வெளிப்படுகிறார்கள்.

முகாம்களில் பெண்களின் நிலை இன்னும் சற்று மாறி, பெண்கள் முன்னேற்றத்திற்கு அச்சமுதாயம் உதவவேண்டும். பெண்களுக்கு உயர்கல்வி, நல்ல தாய் என்னும் ஸ்தானம், விதவைகளுக்கு ஊக்குவிப்பு மற்றும் சிறுவயதுத் திருமணத்தைத் தவிர்த்தல் என்பன வலியுறுத்தப்பட்டு பெண்களை உயர்த்த வேண்டும்.

'பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா"

# திருமலை சென்ற பயணிகளை திருப்பி அனுப்பிய அவலம்

வவுனியாவிலிருந்து வட பகுதிக்கு அனுப்பி வைக்கப் படவென கடந்த வெள்ளியன்று புகையிரதம் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 170 அகதிகள் தமது பயணத்தினை மேற்கொள்ள முடியாத நிலையில் மீண்டும் வவுனியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்ட அவல நிலை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கப்பலில் அனுப்பிவைக்கப்படவென புகையிரதப் பயணத்தினை மேற்கொண்ட இவர்கள் கல்லோயா புகையிரத நிலையத்திலிருந்து வெள்ளியன்று பின்னிரவில் மீண்டும் புகையிரதம் மூலம் வவுனியாவிற்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லோயாவிலிருந்து திருகோணமலைக்கு இவர்களை அழைத்துச் செல்ல உரிய பாதுகாவலர்கள் இன்மையாலேயே இவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தமக்கு தெரிய வந்துள்ளதாக திருகோணமலை அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கல்லோயா வந்தடையும் இவர்கள் பொலீஸ் பாதுகாப்புடன் திருகோணமலைக்கு அழைத்துவரப்படுவது நடைமுறைச் செயலாகும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கை

செல்வி சித்திரா தேவசகாயம்
(இ அ முகாம், போகநல்லூர்)

வானத்தில் பறந்து திரியும், பறவைகளைப் பார்க்கும் பொழுது இன்று ஈழத் தமிழனுக்கு பொறாமையாகத்தான் இருக்கிறது. உண்மையில் இந்தப் பறவைகளுக்கு இருக்கின்ற சுதந்திரம் கூட. இன்று ஈழத்தமிழனுக்கு இல்லாமல் போய்விட்டதே!

இந்த நவீன உலகத்தில் உறவுகள் வீட்டுக்குள்ளேயே தூரமாகிவிட்டது ஏதோ உண்மைதான். ஆனால், அன்பிலும், பண்பிலும், ஈழத் தமிழ்மக்களின் பாணியே தனிதானே!

ஈழத்தமிழ் மக்கள் உறவுகள் தூரமாக்கப்பட்டு விட்டன. அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை எனும் பலவகையான பாச உறவுகள் இன்று இனவெறியால் எங்கெங்கோ சிதறிக் கிடக்கின்றன.

இந்தியா கனடா, ஜெர்மன், லண்டன், சுவிஸ் என்று நீண்டு கொண்டே போகும் உறவுகளின் பிரிவுப்பட்டியல்! சொந்த பந்தங்களை மீண்டும் கண்டு களிப்போமா? இல்லை மாட்டோமா? இப்படியே வாழ் நாள் கழிந்துவிடுமா? என்ற ஏக்கத்தின் கேள்விக் குறிகள் தான் அந்த உள்ளங்களில் எத்தனை! எத்தனை!

இது ஒரு புறம் இருக்க, இன்னும் சொந்த மண்ணிலேயே சோகமாகி தினம் சேதமாகிக் கொண்டிருக்கும் அந்த சங்கத் தமிழ் இனத்தின் துயரை யார் கேட்பார்!

இழப்புகள் மனித வாழ்வில் இயற்கைதான் ஈழத் தமிழருக்கோ நாள்தோறும் அது செயற்கையாகிக் கொண்டிருப்பதை யார் சிந்திப்பார்! உலகில் மனிதாபிமானம் மறைந்து விட்டதா! இல்லை; ஈழத்தமிழர் என்பதால் அது மறந்து விட்டதா?

காலம் கனியும், காலம் கனியும் என்று காத்திருந்த ஈழத்தமிழ் நெஞ்சங்களில் கவலைதானே வளர்கிறது! ஏமாற்றம்தானே இன்றுவரை மிஞ்சி இருக்கிறது! இந்த நிலை மாறுமா?! எதற்கும் ஒரு எல்லை உண்டே! ஆனால் 'ஈழத்தமிழர் பொறுமை மட்டும் சிதலமாகிக் கொண்டிருப்பதேனோ?!

ஒன்று மட்டும் புரிகிறது. இந்த உலகம் இன்னும் முடியவில்லையே! அநீதி எங்கும் தழைத்து நிலைத்து ஜெயித்த கதையில்லை! தர்மம் எங்கும் அழிந்து தொலைந்த கதையுமில்லை! இந்த உலகத்தின் முடிவிலாவது ஈழத்தமிழரின் தர்மம் ஜெயிக்கும் என்ற நம்பிக்கை மட்டுமே இன்று நமது நெஞ்சங்களில் மிஞ்சி இருக்கிறது.

# ராஜீவ்காந்தியின் மகள் திருமணம் ஒரு ஈழ அகதிக்கு சோனியா காந்தி நன்றி மடல்

மறைந்த இந்தியப் பிரதமர் இரர்ஜீவ்காந்தியின் மகள் பிரியங்காவுக்கும், இளம் தொழிலதிபர் ராபர்ட்டுக்கும் அண்மையில் திருமணம் நடந்தது தெரிந்ததே. அத்திருமணத்தை வாழ்த்தி எழுதியிருந்த ஈழத்தமிழ் அகதி ஒருவருக்கு திருமதி சோனியா காந்தி நன்றிக்கடிதம் விடுத்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் அழியாநிலை முகாமில் வாழும் திரு. க. முத்துக்குமாரசாமிக்கு, 24-2-97ஆம் திகதி திருமதி சோனியாகாந்தி விடுத்துள்ள மடல் வருமாறு:

அன்பார்ந்த திரு. முத்துக்குமாரசாமி,

என்னுடைய மகள் திருமணத்திற்கு தாங்கள் அனுப்பிய வாழ்த்துக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தங்களுடைய நல்வாழ்த்துக்களை பிரியங்காவுக்கும் ராபர்ட்டுக்கும் தெரிவிக்கிறேன்.

உங்கள் உண்மையுள்ள
சோனியாகாந்தி
10, ஜன்பத்,
புதுதில்லி-110011.

படிப்பகம்

www.padippakam.com

# நண்பன்

பேரா: இருதய மேரி
பாலாறு அணைக்கட்டு, வாலாஜாபேட்டை

சிறுகதை

அன்று விடுமுறை நாள் அம்மாவின் சொல்லை மந்திரமாக எடுத்துக்கொண்டு அன்று காய்கறி வாங்குவதற்காக மார்க்கெட்டு சென்றான் ராஜா. காய் கறிகளை வாங்கிக் கொண்டு திரும்பியவனை சைக்கிளால் தன்னில் மோதி சென்றவனை பார்த்தான் ராஜா. அவன்வேறு யாருமல்ல அவனுடையகல்லூரி நண்பன் சிவாதான்.

ராஜா, "டேய் சிவா எப்படிடா இருக்கிறாய்"? என்று ஆரம்பித்து இருவரும் பரஸ்பரம் தங்களின் இறந்த கால'வாழ்க்கைச்சுருக்கத்தை' பேசிக்கொண்டே நிகழ்காலத்தில் நடப்பவற்றை பேசலானார்கள்.

சிவா, "ஆமா, ராஜா நீ நம்ம பாண்டியன் வேலை செய்யும் பேக்கரியில் தானே வேலைக்கு போகின்றாய்! வேலை எல்லாம் எப்படி?

ராஜா, "அதை ஏண்டா கேட்கிறாய் நம்ம பாண்டியன் கேசியரா இருக்கிற பேக்கரியில் அவனுக்கு கீழ் வேலை செய்வது சுலபமாக இருக்கும் என்றுதான் நினைத்தேன். ஆனால் அவன் கொஞ்சம் கூட மனச்சாட்சி இல்லாமல் என்கிட்ட வேலை வாங்குகிறான்" என்று தன் மனக்குமுறலைவெளிப்படுத்தினான் ராஜா.

சிவாவோ, "பாண்டியன் அப்பேர்பட்ட ஆள் இல்லையே" என்று சொல்ல

"நானும் அப்படித்தான் நினைத்தேன். ஒன்றாகப் படித்தோம். பழகினோம் என்று கொஞ்சம் கூட நினைப்பு இல்லாமல் ஒரு அன்னியன் மாதிரி என்கிட்ட அதைச் செய், இதைச் செய் என்று வேலை வாங்குகிறாண்டா. சொன்ன வேலையைச் செய்தாலும் ஆயிரம் தப்பு சொல்றான்டா. அதனால வேலையை விட்டு நின்றுவிடலாம் என நினைக்கிறேன்" என்று தன் எண்ணத்தை சொன்னான்.

சிவா அவனுக்கு ஆறுதலாக "இதோ பாரு ராஜா! நம்ம பாண்டியன் நல்லவன் ஆனால் அவன் இப்படி நடக்கிறான் எனக்கேட்கும் போது கஷ்டமாகத்தான் இருக்கிறது ஆனா அவசரப்பட்டு வேலையை விட்டு விடாதேடா. இன்னும் கொஞ்சநாள் இருந்து பார்" என்று தன் அபிப்பிராயத்தை கூறினான்.

ஆனால் ராஜா பொறுமையை இழந்த நிலையில் "இல்லை சிவா நானும் வேலைக்கு சேர்ந்து 4,5 மாதமாகி விட்டது. நானும் அவன் சொன்னதுக்கெல்லாம் தலையாட்டிக்கிட்டிருந்தேன். ஆனா இனி வேலை இல்லாமல் இருந்தால் கூட பரவாயில்லை. பாண்டியனுக்கு கீழே வேலை செய்யப் போவதில்லை" என முடிவாகக்கூறி விட இருவரும் விடை பெற்றனர்.

அடுத்த நாள் காலை வேலைக்குப்போன ராஜாவை முதலாளி கூப்பிடுவதாக சக தொழிலாளி ஒருவன் கூற முதலாளியைப் பார்க்கப் போனான் ராஜா. "வாங்க ராஜா நாளையில் இருந்து இந்த பேக்கரியோட முழுப் பொறுப்பையும் நீங்கள் ஏற்றுகிட்டு நல்ல முறையில் கவனிக்கிறீங்க. என்ன சரியா?" என்று முதலாளி கூற ராஜாவுக்கு ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

பின் "சார் அப்ப பாண்டியன்..." என இழுக்க அவரும் "பாண்டியனை நம்மோட இன்னுமொரு பேக்கரிக்கு முழுப் பொறுப்பையும் ஏற்கச் சொல்லப் போறேன். நீங்கள் ஒன்றுக்கும் தயங்க வேண்டாம். உங்களால் இந்த பேக்கரியோட நிர்வாகத்தை நல்ல முறையில் கவனிக்க முடியும். காரணம் உங்களுடைய நேரம் தவறாமை, வேலையை தவறில்லாமல் செய்யும் உங்கள் முறை. இந்த மாதிரி உங்கள் நல்ல குணங்களைப் பற்றி பாண்டியன் சொல்லியிருந்தார். அவர் தான் இந்தப் பொறுப்பை உங்கள் கிட்ட ஒப்படைக்க சொல்லி சிபாரிசு செய்தார்." என்று சொல்லி முடித்தார் முதலாளி.

தன் நண்பன் நல்லா உழைக்கணும். உழைச்சு முன்னேறணும் என்று நினைத்த நண்பனை தப்பாகப் புரிந்து கொண்ட ராஜா தன்னைத் தானே நொந்து கொண்டான். பாண்டியனை ஒரு நண்பனாக அடைவதற்கு பெருமைப்பட்டுக் கொண்டான் ராஜா. அவனை வாழ்த்துவதற்காகவும் தப்பாகநினைத்தமைக்கும் மன்னிப்பு கேட்பதற்காகவும் அவனது வருகைக்காக காத்திருந்தான்.

---

வவுனியா, மட்டு, திருமலை, கொழும்பில்

# தந்தை செல்வாவை நினைவுகூர்ந்து நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள்

## யாழ்ப்பாணத்தில் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி,

கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா முதலான தமிழர் செறிந்து வாழும் பகுதிகள் எங்கும் அமரரான தந்தை சா. ஜே. வே. செல்வநாயகத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தை முன்னிட்டு மத ஆராதனைகளும், பொதுக்கூட்ட வைபவங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்து ஆலயங்களிலும், கத்தோலிக்க, முஸ்லிம் வணக்க ஸ்தலங்களிலும் அவர் நினைவாக விசேட ஆராதனைகளும் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபைக் கூட்டத்தில் மேயர் செழியன் பேரின்பநாயகம் தலைமையில் இரு நிமிட நேர மௌனாஞ்சலியும் செலுத்தப்பட்டது.

### கொழும்பில்...

கொழும்பில் பம்பலப்பிட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் புதிய கதிரேசன் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன. கறுவக்காடு தவட்டகஹ பள்ளி வாசலில் விசேட தொழுகையும் நடைபெற்றது. வெள்ளவத்தை பிரான்ஸிஸ் தெரு தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தில் சிறப்பு திருப்பாடல் பூஜையும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் விசேட பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

வவுனியா தமிழர் விடுதலைக் கூட்டணியின் வவுனியா கிளையினர் தந்தை செல்வாவின் நூற்றாண்டு வைபவத்தையொட்டி, இந்து கத்தோலிக்க முஸ்லிம் வணக்கத் தலங்களில் விசேட வழிபாட்டு ஆராதனை நிகழ்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இவற்றில் கட்சி முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வாவின் நினைவுத் தூபியைப் புனரமைத்துள்ள புளொட் இயக்கத்தினர் அங்கு தந்தை செல்வாவுக்கு மலரஞ்சலி செலுத்தியதாக அவ்வியக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நினைவு தினப் பொதுக் கூட்டமும் அங்கு நடைபெற்றதுடன், வின்சர் தியேட்டர் சந்தியில் தந்தை செல்வாவின் சிலை ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

அத்துடன் போராட்ட முன்னோடிகளாகிய சிவகுமார் குட்டிமணி ஆகியோரின் நினைவு சிலைகளுக்கான அடிக்கற்களும் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நாட்டப்பட்டதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

புளொட் இயக்கத்தின் உப தலைவரும் இராணுவத் தளபதியுமாகிய என் மாணிக்கதாசன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் யாழ்ப்பாணப் பகுதியின் பிரமுகர்கள் பொதுமக்களும் இவ்வைபவங்களில் கலந்து கொண்டார்கள்.

மேலும் யாழ் நகர பஸ் நிலையப்பகுதி உட்பட பல முக்கிய இடங்களில் தந்தை செல்வா நூற்றாண்டு வைபவத்தையொட்டி சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

---

### பிரிவினையைத் திணிப்போர் சிங்களரே!

சிங்களப் பேரினவாதிகளின் தமிழ் விரோத நடவடிக்கைகளில் இருந்து தெரிவது என்னவென்றால், தமிழ் மக்கள் உரிமை பெற்று வாழ்வதைச் சிங்களவர்கள் ஒரு போதுமே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பது தான். எனவே இலங்கையில் பிரிவினையைக் கேட்பது தமிழரல்ல. சிங்களவரே பிரிவினையைத் தமிழ் மக்கள் மீது திணிக்கிறார்கள்.

—தந்தை செல்வா

(பண்டா-செல்வா ஒப்பந்தம் முறிந்தது என்று அரசால் அறிவிக்கப்பட்டு வன்முறை தூண்டி விடப்பட்டபோது அளித்த பேட்டியில்)

---

### எமது இயக்கம் அறவழிப்பட்டதே

"தனித் தமிழ் ஈழ நாட்டை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எமது இயக்கம் முன்னேறுகிறது; தனித் தமிழ் ஈழம் நிறுவுவது எளிதான காரியமல்ல என்பதும், மிக வில்லங்கமானது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

ஆனால், நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்திற்குள் இருந்து விடுபட்டு வெளியேற வேண்டும்; அல்லது அழிந்து போக வேண்டும்; இது உறுதியானது.

எனவே நாங்கள் போராடித் தனித் தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவோம். நாங்கள் இணைப்பாட்சிக் கொள்கையைக் கைவிட்டு விட்டோம்; எங்கள் தனி நாட்டுக்கானஇயக்கம் அறவழியிலேயே நடைபெறும்."

—தந்தை செல்வா

(1976 நவம்பர் 19ம் நாள் சிறீலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை)

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### முறைசாரக் கல்வி-திறந்தவெளிப் பல்கலைக் கழகத் திட்டம்

சென்னை, அண்ணாமலை, மதுரை காமராஜர். இந்திராகாந்தி ஆகிய பல்கலைக் கழகங்கள் திறந்தவெளிப் பல்கலைக் கழகத் திட்டங்களையும் அஞ்சல் வழியில் நடத்தி வருகின்றன. அடிப்படைக் கல்வித் தகுதி இல்லாத மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பட்டப்படிப்பினையும், பட்ட மேற்படிப்பையும் படிக்க வாய்ப்பு உண்டு. பட்டப்படிப்பினை மேற்கொள்ள 19 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். பட்ட மேற்படிப்பிற்கு 25 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். மேலும். இந்திராகாந்தி பல்கலைக் கழகம் பல சான்றிதழ்ப் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றது இதற்குத் தேவையான சான்றிதழ் பிறப்புத் திகதி அத்தாட்சி.

ஈழ அகதி மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி கற்க இவ்வரிய வாய்ப்புகளை பயன்படுத்தலாம்.

#### கழகத்தில் பெயர் பதிவு செய்தல்

உயர் கல்வி கற்க விரும்பும் ஈழ அகதி மாணவர் உயர் கல்வி அனுமதி விபரப்படிவத்தினை பூர்த்தி செய்து, கழகத்தில் தம் பெயரைப் பதிவு செய்தால், உயர் கல்வி நிறுவனங்களில் கற்பது தொடர்பான விபரங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இப்படிவம் கழகப் பாவனைக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது. தம் விபரங்களை எமக்கு அறியத் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

#### குறிப்பு-1

ஈழ அகதி மக்களுக்காக வழங்கப்படும் இட ஒதுக்கீடு தமிழ் நாடு அரசினால் வழங்கப்படுகின்றது. இவ்வொதுக்கீட்டில் தனி நபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ எந்தச் சம்பந்தமும் இல்லை.

#### குறிப்பு-2

கழகத்தில் பெயர் பதிவு செய்வதால் கல்லூரிகளில் அனுமதி கிடைக்கும் என்பது உறுதியல்ல.

படிப்பகம்




## செல்வா நூற்றாண்டு விழாவும் சிங்கள அரசும்

செல்வாவை நினைப்போம் ...தேசத்தை வளர்ப்போம்...

என்ன சுப்பையாண்ணை செல்வா பாட்டோடை வாரி யள் ?

தம்பி உனக்கு அவரைப் பற்றித் தெரியுமே

இண்டைக்கு அவற்றை நூற் றாண்டு ஆரம்ப விழா பரவலா எல்லா இடமும் நடந்துகொண்டு இருக்கு

இந்தியாவில் தமிழ் நாட்டி லையும் இந்த வருடம் முழுவது மாக அவருக்கு விழா எடுக்கப் போகினமாம்.

உதுல விசயம் என்ன தெரி யுமே இலங்கையில மூலை முடுக் கெல்லாம் ''செல்வா'' விழா சிறப்பாக கொண்டாடி வருகின மாம்.

அரசாங்கமும் இண்டைக்கு தந்தை செல்வாவைப் பற்றி ரேடியோவிலையும், ரி.வி யிலை யும் பெரிசாச் சொல்லியினமாம்.

எல்லாம் செல்வா அபிமானி களின் ஆதரவைப் பெறத் தானாம்.

''செல்வா பெயரைச் சொல்லியாவது இன்னும் கொஞ்ச காலத்துக்கு அரசியல் நடத்தலாம் எண்டும் சிலபேர் வரிஞ்சு கட்டிக் கொண்டு திரி யினமாம்.

தம்பி எப்பிடியோ அந்தத் தந்தைக்கு நல்லபடியாக விழா வெடுத்து எமது கண்ணீர் அஞ்ச லியைச் செலுத்தினால் அதுவே போதுமானதாகும்.

* * *

'' தம்பி வடபகுதி தென்மராட் சிப் பகுதியில் முந்தி நடந்ததைப் போல இப்பவும் பலபேர் காணா மல் போகினமாம்.

ஆமிட்டைப் போய்க் கேட் டால் எங்களிட்டை ஏன் வாறி யள் போய் அங்கை கேளுங்கோ வன் என்று பிரபலமானவரின் பெயரைச் சொல்லி திருப்பி அனுப்புகினமாம்.

ஆனா கொஞ்ச நாட்கள் கழிஞ்சாத்தான் எங்கையாவது மண்டையோடு, மற்றும் எலும்பு கள் காணப்படுமாம்.

அதைப் பார்த்ததும் அடை யாளம் காண முடியாத பெற் றோர் ஆளாளுக்கு அந்த இடத்திலேயே ஒப்பாரி வைக் கினமாம்.

எப்படி அமைதியானவர் களின்றை வேலை?

* * *

யாழ்ப்பாணம், கிளிநொச் சிப் பகுதிகளில் தாக்குதல் நடத் தியதைப் போல இராணுவம் இப்ப மட்டக்களப்பு பகுதியில தாக்குதல் நடத்தி வருகினமாம் அது மட்டுமல்ல ஷெல் அடிக ளும், பொம்மர் அடிகளும் சும்மா வெளுத்துக் கட்டினமாம்.

# தந்தை செல்வா...

''தந்தை செல்வாவும் முஸ்லிம்களும்'' என்று சொல் லும் பொழுது என் நினைவுக்கு ஆயிரமாயிரம் விஷயங்கள் வந்துபோகின்றன. வரலாற் றிலே படிக்கும் நிறைய விஷ யங்கள் இருக்கின்றன திரும் பத் திரும்ப பலரும் எழுதும் விஷயங்கள் ஆயிரம் இருக்கின் றன. புத்தளத்துப் பள்ளிவாச லிலே முஸ்லிம்கள் பொலிசாரி னால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பொழுது அவர் களுக்காக குரல் கொடுத்த ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் என்று அடிக்கடி நாங்கள் எல்லோரும் நினைவு படுத்திக் கொள்ளும் ஒரு தலை வராக மட்டுமல்ல இந்த நாட் டிலே வாழும் முஸ்லிம்களுக் கும் சுயநிர்ணய உரிமை இருக்கின்றதென்பதை, தாம் தமிழரசுக் கட்சியைத் தொடக்கிவைத்து ஆற்றிய முதல் உரையிலேயே அழுத் தந்திருத்தமாகச் சொல்லி வைத்த தலைவர் தந்தை செல்வா என்பதை நாங்கள் பெருமையுடன் நினைவு கூறு கின்றோம்.

## பெருந்தகை செல்வா

அது மட்டுமல்ல, தொடர்ந்துவந்த தம்முடைய அரசியல் நடவடிக்கைகளி லெல்லாம் வட-கிழக்கிலே வாழும் முஸ்லிம்களின் அரசி யல் பேணுவதில் பெருமை கண்ட அரும்பெரும் தலைவ ராக நாங்கள் தந்தை செல் வாவைக் காண்கிறோம்.

இந்தத் தலைவரைப் பற்றி நிறையக் கதைக்க முடி யும். கடந்தகால அரசியலை இன்று நினைத்துப்பார்க்கும் போது, முஸ்லிம் பெரும்பான் மைத் தேர்தல் தொகுதிகளி லெல்லாம் பல்வேறு கட்சிகளி லிருந்து இருமுனை-மும்முனை நான்கு முனைகளிலேயெல் லாம் போட்டியாளர்கள் நிறுத் தப்பட்டபோது, கணிசமான தொகையினராக வாழும் தமிழ் வாக்காளர்களுடைய சார் பில் வேட்பாளர்களை தோற் கடிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தபோதெல்லாம் அவ் வாறு நிகழ்வதைத் தடுத்த ஒரு பெருந்தகையாக நாங்கள் தந்தை செல்வா அவர்களைக் காண்கிறோம்

## ஒற்றுமைச்சின்னம்

முஸ்லிம்களுக்கு இருக்கும் பாராளுமன்ற ஆசனங்களை அவர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதில் அக்கறையுடன் செயற்பட்ட ஒரு தனிப்பெரும் தலைவராக நாங்கள் அவரைக் காண்கி றோம். இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் மத்தியில் இருந்த பிளவுகளையெல்லாம் நீக்கி- யாழ்ப்பாணத் தமிழர், மட்டக் களப்புத் தமிழர், இந்தத் தமி ழர்களுக்கு மத்தியிலே அங்கு மிங்குமாகச் செறிந்து வாழும் தமிழ்பேசும் முஸ்லிம்கள் உட் பட எல்லாச் சமயத்தவர் களையும், சமூகத்தவர்களை யும் பிரிவினையும் ஒன்றி ணைத்து இந்த நாட்டுத் தமி ழர்களின் அரசியல் வரலாற் றிலே ஒரு தலைசிறந்த தானைத் தளபதியாக இருக் கும் தந்தை செல்வா அவர்களு டைய இந்த நூற்றாண்டு விழா வில் அவர் முஸ்லிம்களுக்கா கச் செய்த ஆயிரம் விஷயங் கள் இருந்தாலும் அவரை, அவருடைய தலைமுறையைச் சாராதவன் என்ற வகையிலே நான் பார்க்கும்போது - அவ ரைப்பற்றிக் கேள்விப்படும் போது அவருடைய குணாதி சயங்களைப்பற்றி வாசிக்கும் போது எல்லோரும் அதிசயப் படும் எத்தனையோ விஷயங் கள் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது

தலைமைத்துவத்துக்குரிய குணாம்சங்களிலே முக்கிய மாக ஒருவர் தலைவராக இருந்தால் அவர் பீரங்கிப் பிர சங்கியாக இருக்கவேண்டும் என்ற ஒரு நியதி இருந்தது. அவ்வாறில்லாவிட்டாலும் கூட அடக்க ஒடுக்கமாக ஆர வாரம் இன்றி அரசியல் செய்து இந்த நாட்டிலேயுள்ள சிறு பான்மையினங்களுக்குக் கௌரவத்தைத் தந்த ஒரு மாபெரும் தலைவராக நாங் கள் அவரைக் காண்கின் றோம்.

எப்பாடுபட்டேனும்
இழந்ததை மீட்போம்

''சுதந்திரத் தமிழீழம் நிறு வுவது வில்லங்கமான காரியம் என்பது எமக்குத் தெரியும். ஆனால் இதைவிட இனி நமக்கு வேறு வழியில்லை இன்றேல் சிங்களப் பெரும் பான்மை இனத்தினால் நாம் விழுங்கப் பட்டுவிடுவோம். எப்பாடு பட்டாலும் எமது இழந்த தாயகத்தை மீட்டே தீருவோம்.''

தந்தை செல்வா




அன்புள்ள ஆசிரியரே !

இலங்கை உள்ளூராட்சித் தேர்தல் முடிவு பற்றி திரு· சந்திரகாசன் கூறிய கருத்து நூற்றுக்கு நூறு சரியே. மீண் டும் சிங்கள வெகுசனப் பயங்கரவாதம் தோன்றும்முன் தமி ழர்கள் விழித்துக்கொள்ள வேண்டும்.

செ. கந்தப்பு, வேதாரண்யம்.

''ஈழத்தந்தை நூற்றாண்டுவிழா புதிய விடிவுக்கு வழி வகுக்கட்டும்'' என்று ஆசிரியத் தலையங்கத்தில் சொல்லி யுள்ளபடி உலகம் முழுவதும் பரவியுள்ள ஈழத்தமிழ் மக்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஆக்கரீதியான செயல் களை மேற்கொள்ள வேண்டும்.

A. ரமணீதரன், கோவை—1.

தந்தை செல்வா பற்றி க. முத்துக்குமாரசாமி எழுதி யிருந்த சிறப்புக்கட்டுரை சிறப்பாகவே இருந்தது.

அ. கருணைதாசன், மதுரை.

'இலட்சியத்தாய்' - செல்வி சித்திராதேவசகாயத்தின் சிறுகதை என்னை அழவைத்துவிட்டது. ஒவ்வொரு ஈழத் தாயும் இப்படி இருந்தால், எப்போதோ ஈழம் மலர்ந்திருக் கும்.

வா.மு. குணசீலன், பார்த்திபனூர்

''சௌதிப்பணம் குடும்பத்தில் சௌக்கியத்தைத் தருகி றதா?''-கட்டுரை, உள்ளபடி சௌதி செல்லும் பெண் களைச் சிந்திக்க வைத்துள்ளது.

வே. மாணிக்கதாசன், இராசபாளையம்.

(அக்கட்டுரையை எழுதியவர் சந்திரகாசனின் மைந்தர் சா.செ.ச. இளங்கோவன். பெயர்விட்டுப் போனதற்காக பொறுத்துக்கொள்க - ஆசிரியர்)

இன்றுள்ள நிலையில் வடகிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது அழிவுக்கு அஸ்திவாரம் போடுவதே என்ற 'கேயார்' கட்டுரை உண்மையின் படப்பிடிப்பு· சிங்களப் பகுதி உள்ளூராட்சித் தேர் முடிவு பற்றி குயுக்தி யார் அனித்துள்ள பதில் திருப்தி தருவதல்ல.

மா. முருகேஸ், திருச்சி -1.

# திரியாய், கல்லராவ காடுகளை நோக்கி திருமலையிலிருந்து ராணுவ நடவடிக்கை

### 20 புலிகளும் ஒரு படைவீரரும் பலியானதாக தகவல்

விடுதலைப் புலிகளின் முகாம்களைத் தேடியழிக்கும் இராணுவ நடவடிக்கை ஒன்று திருகோணமலையில் ஆரம் பிக்கப்பட்டது 'ரன்கல' எனப் பெயரிடப்பட்டுள்ள அந்நடவடிக்கையில் ஈடுபட் டுள்ள பெரும் எண்ணிக்கையி லான படையினர் கவச வாக னங்கள் சகிதம் முன்னேறி வருவதாக இராணுவ வட்டா ரங்கள் தெரிவித்தன.

'ரன்கல' இராணுவ நட வடிக்கையின் போது படை வீரர் ஒருவர் பலியானதுடன் ஒன்பது பேர் காயமடைந்த தாகவும், புலிகள் தரப்பில் 20 பேர் பலியாகியும் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளதாக வும் திருகோணமலை இரா ணுவ வட்டாரங்கள் அறிவித் தன.

## தேடியழிப்பு

படையினர் திரியாய், புடவைக்கட்டு, கல்லராவ பகுதிகளுக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளனர். திருமலை நகரிலிருந்து சுமார் 30கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ள மேற்படி காடு சார்ந்த பகுதிகளில் புலிகளின் முகாம் கள் அமைந்திருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்தே படையினரின் 'தேடி அழிக்கும்' நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

இரு தரப்பிலும் பாரிய சூட்டுச் சப்தங்கள் கேட்பதா கவும் எனினும் உண்மையான அழிவுகள், விபரங்கள் எதுவும் தமகுத் தெரியாது எனவும் அதனை அண்டியுள்ள மக் கள் தெரிவிக்கின்றனர்.

## பலியும் காயமும்

திரியாய், புடவைக்கட்டு, கல்லராவ பகுதி கரையோரக் காடுகளை நோக்கியே படை யினரின் இராணுவ நடவடிக் கைகள் அமைந்துள்ளன.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தபெரிய கல்லாறு பகுதியில் புலிகள் குழுவினருக்கும் படையின ருக்குமிடையே மோதல் சம் பவமொன்று இடம்பெற்றது. படையினர் தாக்கியதில் புலி கள் உறுப்பினர் ஒருவர் பலி யானார். படையினர் தொடர்ந்து மேற்கொண்ட தேடுதல்களில் இரண்டு கிர னேட்டுக்கள் இரு சயனைட்டு கள் புலிகளின் உறுப்பினர் ஒருவரின் சடலம் என்பன மீட் கப்பட்டன என தேசிய பாது காப்பு அமைச்சின் நட வடிக்கை தலைமைச் செய லகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

மட்டக்களப்பு குடாபொக் குன என்னுமிடத்தில் ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் புலிகளுக்கு மிடையில் மோதல் சம்பவ மொன்று இடம் பெற்றது. இதனையடுத்து இப்பகுதியில் படையினர் தேடுதல்களில் புலிகளின் இரு சடலங்கள் ரி-56 ஆயுதம், 4 சயனைட் என்பன கைப்பற்றப்பட் டன.

www.padippakam.com

# தமிழர் கைகள் இணையுமா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அப்படி நிற்பதற்கும் சர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழர் தலைவர்களே ஆக்கமும் ஊக்கமும் ஊட்டினர்.

## தமிழீழக் கோரிக்கை

இதனால் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோது அது சிங்கள தேசிய சுதந்திரமாக வடிவு கொள்ள இடங் கொடுத்ததாகி விட்டது.

இதை மாற்றியமைத்த பெருமை தந்தை செல்வாவையே சேரும். அவர் காலத்தில் தான் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஒரேகுடைக் கீழ் வந்தனர். அவர் அமைத்த தமிழரசுக் கட்சியே, 1974ம் ஆண்டு அனைத்துத் தமிழ் அமைப்புகளையும் ஒருங்கிணைத்துக்கொண்டு ''தமிழர் ஐக்கிய முன்னணி''யாக பேருருக் கொண்டது. அதுவே 1976ல் ''தமிழர் விடுதலைக் கூட்டணியாக வடிவு கொண்டு 'தமிழீழத் தனி நாடு கோரிக்கையைப் பிரகடனப்படுத்தியது.

## தேர்தல்தீர்ப்பு

நிச்சயமாக எடுத்த எடுப்பிலேயே தந்தை செல்வாவினால் இந்தத் தமிழீழத் தனி நாட்டுக் கோரிக்கை முன் வைக்கப்படவில்லை என்பதையும், இலங்கையிலே தமிழர்-சிங்களர் இணைப்பாட்சி கோரி, அதையும் கூட நட்புறவின் நிமித்தம் 'பிரதேச சபை' என்ற அளவுக்குக் குறைத்துக் கொண்டு, சுதந்திர இலங்கையை ஆண்ட இரு பிரதான சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசுகளுடன் விட்டுக்கொடுத்து உடன்பாடு கண்டு, அவற்றை அவர்களே ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்து விட்டதுடன் நில்லாது, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலம் ''தமிழர் பாரம்பரியப் பகுதிகளை''யும் சிங்களப் பகுதியாக்கிவிட முற்பட்டதனாலும், இனப் படுகொலைகளைத் தூண்டி விட்டு, தமிழினத்தை அழித்தொழிக்க முற்பட்டதனாலுமே வேறு வழியின்றி அத்தனிநாட்டுக் கோரிக்கை உருவானது.

அந்தக் கோரிக்கையையும் சில தலைவர்களின் கோரிக்கையாக வைத்திராமல், 1977 பொதுத் தேர்தலில் ஒட்டு மொத்தத் தமிழினத்தின் கோரிக்கையாக முன் வைத்து அதுவே தங்கள் முடிந்த முடிபு எனத் தமிழ் மக்களால் தேர்தல் தீர்ப்பாக உலகின் முன் படைக்கப்பட்டது.

## செல்வா தலைமை

சிங்களத் தலைவர்கள் சனநாயகத்தை மதிப்பவர்களாக இருந்திருந்தால், எத்தியோப்பியாவில் நடந்த தேர்தல் தீர்ப்பின் விளைவாக 'எரித்திரியா'வுக்கு விடுதலையளிக்கப்பட்டதைப் போல ஈழத்திற்கும் விடுதலையளிக்கப்பட்டிருக்கும். ஓயாத உள்நாட்டுப் போர் நிகழ்வதற்கும் இரத்த ஆறு ஓடுவதற்கும் இடமேற்பட்டிருக்காது சனநாயக நெறியில்-சமாதான வழியில் தமிழர்களும், சிங்களவரும் தங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்திருக்கலாம்.

அது நிகழவில்லை என்பது ஒரு புறமிருக்க, அந்த அளவுக்கு ஈழத்தமிழர்களிடத்தில் ஒற்றுமையையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது தந்தை செல்வாவின் தலைமை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இன்றைக்கும் தந்தை செல்வாவின் பெயர் ஈழத்தமிழ் மக்களிடத்தில் ஒற்றுமை மந்திரமாக இருப்பதையும் மறுக்க முடியாது.

## மீட்டுருவாக்கம்

அதனால்தான் அவரை அறிந்திராத தலைமுறை தலையெடுத்து விட்ட இந்த நாளிலும், அவருடைய நூற்றாண்டு விழாவை எடுப்பதில் தமிழ்க் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு ஈடுபட்டுள்ளன.

தங்களைப் பிரபலப்படுத்திக்கொள்ள அல்லது நிலை நிறுத்திக்கொள்ள இந்த நூற்றாண்டு விழாக்களைப் பயன் படுத்திக் கொள்வதைப் பார்க்கிலும், தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்த அபிலாசையைப் பிரபலப்படுத்துவதற்கும், ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும் இதைப் பயன்படுத்துவார்களானால் உள்ளபடியே தமிழினத்திற்கு நன்மை பயப்பதாகும்.

தந்தை செல்வாவின் தலைமை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கிய சில பண்புகளை மீட்டுருவாக்கம் செய்வது இன்றையச் சூனிய நிலையை அகற்ற மிகமிகத் தேவையாகும்.

* தனி மனித வழிபாட்டைத் தவிர்த்தல்
* சனநாயக நெறி முறைகளை மதித்தல்
* கருத்து வேறுபாடுகளை வெளியிட உரிமையளித்தல்
* விமர்சனங்களைச் சகித்துக் கொள்ளுதல்
* எதற்காகவும் யாரையும் பழிவாங்க முற்படாமை.
* எந்த நிலையிலும் இனத்தின் அழிவைத் தவிர்த்தல்
* வன்முறை வழிபாட்டைத் தூண்டாமை

## செல்வா பெருந்தன்மை

ஆம்; ஜி. ஜி. பொன்னம்பலம் மிகப்பெரிய வரலாற்றுத் தவறைச் செய்தார் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் வென்ற பலர்-தமிழரசுக் கொள்கைக்காக உயிர் விடவும் தயார் என்று சொன்ன பலர் பின்னர் அரசோடு சேர்ந்து கொண்டனர். அதற்காகச் செல்வா அவர்களைப் பழிவாங்கச் சொல்லவில்லை.

மாறாக, அவர்கள் மனம் திருந்தியபோது 1976ல் தமிழர் கூட்டணியில் அவர்களையும் இணைத்துக் கொண்டார்.

இன்றோ, சின்னஞ்சிறு கருத்து வேறுபாடுகளுக்கெல்லாம் ஆளையே முடித்துவிடும் கொடுமை, ஈழத்தில் மட்டுமின்றி, கடல் கடந்த நாடுகளிலும் தமிழர்கள் மத்தியில் நடப்பது வேதனையைத் தருகிறது.

நிச்சயமாக இது செல்வா வழியல்ல.

எனவே, தந்தை செல்வாவின் இந்த நூற்றாண்டு விழா தொட்டு, அத்தகைய தமிழினத் தற்கொலை வழிகளுக்கு முற்றுப்புள்ளியிட்டு, மீண்டும் தந்தை செல்வா காலஅரசியல் பண்பாட்டையும், இன ஒற்றுமையையும் பேணி வளர்க்கச் சூளுரை ஏற்போமாக!

-தமிழீழதாசன்

---

### ஒரு ஈழத் தமிழனின் பயோடட்டா

பெயர் : ஈழத்தமிழன்

இன்றைய முகவரி : பன்னாட்டு அகதி

வயது : 14 (யுத்தம் தொடங்கியது தொட்டு)

படிப்பு : ஏ.கே. 47-சையனட் குப்பி.

பிடித்தது: இந்தியாவின் அரவணைப்பு

பிடிக்காதது : சிங்களப் பேரினவாதம்

மறக்க முடியாதது: கொட்டும் மழையில் யாழ் நகரை விட்டு வெளியேறியது.

தாகம்: தமிழீழத்தனிநாடு

தகுதி : எதையும் இழக்க முந்தும் தியாகம்

நம்பிக்கை : என்றாவது ஒரு நாள் விடிவு கிட்டும் என்ற உறுதி.

ஆக்கம் : N. தயா

---




*யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. * இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.*

மதிவந்னி-வேலூர்-1.

கேள்வி : எத்தனையோ ஆண்டுகள் தந்தை செல்வாவை மறந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்த ஆண்டு அவருடைய பிறந்த நாள் விழாவை ஆர்வத்தோடு கொண்டாடுவதற்குக் காரணமென்ன ?

பதில் : 1. இது தந்தை செல்வாவின் நூற்றாண்டுத் தொடக்க விழா என்பதால் இருக்கலாம் 2. மற்ற இயக்கங்களும் இதைக் கொண்டாட முயற்சி செய்வதால், தான் முந்திக்கொள்ள வேண்டும் என்பதாக இருக்கலாம்.

டி.கே. மரியதாசன்-வத்தலக்குண்டு

கேள்வி : இந்திய விடுதலைப் போராட்டத்தில் எத்தனையோ பெரிய தலைவர்கள் இருந்தாலும் தேசத்தந்தை' என்று, மகாத்மா காந்தி ஒருவரையே இந்தியர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அகிம்சைப் போராட்டத்தில் நம்பிக்கையில்லாதவர்கள்கூட இதில் மாறுபட வில்லை. ஆனால் ஈழத்தில் மட்டும் தந்தை செல்வாதான் தேசத் தந்தை என்று வரலாறு வரையறுத்து விட்டு விட்ட பிறகும் 'தேசபிதா', 'தேசியத் தலைவர்' என்றெல்லாம் பலரைச் சுட்டிக்காட்டுவது சரியா?

பதில் : வரலாற்று வரையறுப்பு என்று நீங்களே சொல்லி விட்ட பிறகு இதில் வேறென்ன நான் சொல்ல இருக்கிறது?

மா. கிருத்திகா-சென்னை-78.

கேள்வி : இந்தியப் பிரதமராக ஐ.கே. குஜ்ரால் வந்திருப்பது இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர உதவியாக இருக்குமா ?

பதில்: திரு. குஜ்ரால் இந்தியாவின் வெளியுறவு அமைச்சராக இருந்து இந்தப் பிரச்சினையில் ஆழ அகலங்களை உணர்ந்தவர். அதனால் இந்தியாவின் அணுகுமுறையில் சாதக அம்சம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

பி. சுகிர்தரன்-நாமக்கல்

கேள்வி : இந்தியாவின் பிரதமராக ஒரு தமிழர் வரும் வாய்ப்புத் தவிர்ந்து போனது பற்றி என நினைக்கிறீர் குயுக்தியாரே ?

பதில் : தாய் வீட்டின் பொறுப்புக்கு சகோதரர்களில் யார் வந்தாலும், இரத்த பாசங்களுக்கு ஏற்படும் குல நாசங்களைத் துடைக்க முன் வந்தால் போதும் என்பதுதான்!

சி. நா. குகதாசன்-தஞ்சை

கேள்வி : புதுவை, கடலூர் மீனவர்களின் தகராறு சுமுகமாகத் தீர்க்கப்பட்டதைப் போல, இராமேசுவரம் மீனவர்களின் பிரச்சினையும் தீர்க்கப்படுமா ?

பதில் : புதுவை, தமிழக அரசுகள் தமிழர்களுடையவையாக இருந்ததால் ''யாருக்குப் பாதிப்பு என்றாலும் இனம் பாதிக்கப்படும்'' என்பதை உணர்ந்து விட்டுக் கொடுத்து சுமுக உறவு ஏற்படுத்தப் பட்டது. தமிழீழம் மலருமானால் அது போலவே தமிழக-தமிழீழ அமைச்சர்கள் கூடி கச்சத் தீவுப் பிரச்சினையை ஒரு நொடியில் தீர்த்து வைப்பார்கள்.

N.R. சிவதாசன்-நெல்லை-4.

துகேள்வி : காங்கிரசின் ஆதரவு இருந்தால்தான் இந்தியாவில் ஐக்கிய முன்னணி அரசு நீடிக்க முடியும் என்பதைப் பயன்படுத்தி. இ.காங். தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டதைப் போல, தமிழ்க் கட்சிகளின் ஆதரவைச் சார்ந்திருக்கும் சந்திரிகா அரசை இலங்கையில் தமிழ்க்கட்சிகள் அச்சுறுத்திக் காரியம் சாதிக்கக் கூடாதா ?

பதில் : தாங்கள் உயிர் பிழைத்திருக்கவே அரசின் தயவைச் சார்ந்திருக்கும் நிலையில் சில தமிழ்க் கட்சிகள் இருப்பதால், இந்தியாவில் ஐ மு. விடம் இ. காங்கிரஸ் செய்வதை இலங்கையில் தமிழ்க் கட்சிகளிடம் சந்திரிகா செய்து கொண்டிருக்கிறார்.

இ. காங்கிரசில் ஒற்றுமையில்லாதிருந்தால் ஐ மு.விடம் அதன் அச்சுறுத்தல் பலித்திருக்குமா ? தமிழ்க்கட்சிகளிடம் ஒற்றுமை இல்லையே! என் செய்வது?

---

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Salt Colony, Ist Street, IIIrdFloor, Egmore, Chennai-600008.
Printed at Kuralnery Achagam, Chennai-94

**சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை**

படிப்பகம்